Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, SEPTEMBER 13, 2024

வெள்ளிக்கிழமை செப்டெம்பர் 13, 2024 | ஒளி: 10 கதிர்: 050 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ FREE




## 'Times School of Higher Education' ஜனாதிபதியால் திறந்து வைப்பு

**இளைஞர்களுக்கு நல்ல வேலை வாய்ப்புகளைத் தேடுவதற்குத் தேவையான ஆதரவை வழங்க எதிர்பார்க்கிறோம்**

இளைஞர் யுவதிகளுக்கு உலகளாவிய தரத்திற்கு ஏற்ப உயர்கல்வி வாய்ப்புக்களைப் பெறும் சந்தர்ப்பத்தை வழங்கும் வகையில் அரச மற்றும் தனியார்த் துறையில் பல புதிய கல்வி நிறுவனங்கள் நாட்டில் ஸ்தாபிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு காலிமுகத்திடல் ஹோட்டலில் வியாழக்கிழமை (12) முற்பகல் இடம்பெற்ற "Times School of Higher Education" உயர் கல்விக்கான பாடசாலைத் திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



## காலாவதியானவை சிக்கின

மினுவாங்கொடை அழகு நிலையமொன்றில் பெண்ணொருவருக்கு பூசப்பட்ட அழகுசாதனப் பொருட்களால் ஒவ்வாமை ஏற்பட்டு தலைமுடி உதிர்ந்த சம்பவத்தையடுத்து மினுவாங்கொடை நகரில் விஷேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் புதன்கிழமை (11) மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2



## கோட்டாவிற்காக பரிந்து பேசினார் நாமல்

கோட்டாபய ஜனாதிபதி பதவியிலிருந்து விலகுவதற்கு முன்னர் எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசைகளை நிறுத்துவதற்கும் மின்சாரத் தடைகளை நிறுத்துவதற்கும் கோட்டாபய ராஜபக்சவின் அரசாங்கம் போதிய நிதி மற்றும் நடவடிக்கைகளை வழங்கியதாக ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ அவிசாவளையில் தனது தேர்தல் பிரசாரத்தின் போது தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பொறுப்பானவர்கள் என்று பலர் தம்மைக் கூறியமைக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இந்த அறிக்கையை வெளியிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி பதவி விலகுவதற்குக் காரணங்கள் இருந்தன.

தொடர்ச்சி P2

வாக்களித்ததை யாருக்கும்

## "சொன்னால் கைது"



ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்புக்கு செப்டெம்பர் 12ஆம் திகதி வியாழக்கிழமையுடன் இன்னும் ஒன்பது நாட்களே இருக்கின்ற நிலையில், வாக்களிப்பை நடத்துவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி அடைந்துள்ளது என தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க, வாக்களிப்பு நிலையங்களுக்கு கையடக்க தொலைபேசிகளை எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது என்றார்.

வாக்காளர்கள் மட்டுமன்றி, வேட்பாளர்களும் வாக்குச்சாவடிகளுக்கு கையடக்க தொலைபேசிகளை எடுத்துச் செல்ல முடியாது.

தொடர்ச்சி P2

## ஒக்.26 எல்பிட்டிய தேர்தல்




எல்பிட்டிய உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒக்டோபர் 26ஆம் திகதி நடைபெறவுள்ளது. எல்பிட்டிய உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் கடந்த 9ஆம் திகதி ஆரம்பமாகி வியாழக்கிழமை (12) நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்தது.

1. ஜனசேத பெரமுன
2. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன
3. ஐக்கிய மக்கள் சக்தி
4. பொதுஜன ஐக்கிய முன்னணி
5. பொதுஜன ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பு
6. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி
7. தேசிய மக்கள் சக்தி
8. தேசிய மக்கள் கட்சி
9. இரண்டாம் தலைமுறை கட்சி, என்பன தமது வேட்பு மனுக்களைச் சமர்ப்பித்துள்ளதுடன் கட்டுப்பணம் செலுத்தியிருந்த மக்கள் காங்கிரஸ் தமது வேட்பு மனுவைத் தாக்கல் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



## "பொதுவேட்பாளரே ஒரே வழி"

இந்த நாட்டில் தமிழர்கள் அழிவுப்பாதைக்குக் கொண்டு செல்லப்படுகின்றார்கள்.இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு நடந்த அநீதிகளைச் சர்வதேசத்திற்குக் கொண்டு செல்வதற்கு இன்று எமக்குள்ள ஒரே வழி பொது வேட்பாளராகும். வேறு யாருக்கும் வாக்களிப்பதன் மூலம் அதனை அடையமுடியாது என மட்டக்களப்பு மாவட்ட ஜேசு சபை துறவி அருட்தந்தை ஜோச்மேரி தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற நிகழ்வில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இந்த நாட்டில் தமிழர்கள் அழிக்கப்பட்டுவருகின்றார்கள்.இதனை வெளியுலகுக்குக் கொண்டுசெல்லவேண்டும்.

நாங்கள் சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்களிப்பதனால் எமது பிரச்சினையைக் கொண்டுசெல்ல முடியாது. அதனால் பொது வேட்பாளராக அரியநேத்திரன் நிறுத்தப்பட்டுள்ளார்.இது நல்ல சந்தர்ப்பம்.இதனை நாங்கள் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்றார்.

## "செப்டெம்பர் 18க்கு பின் வன்முறைகள் வெடிக்கலாம்"

ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்குக் காலக்கெடு செப்டெம்பர் 18ஆம் திகதி முடிவடைந்த பிறகு, எதிர்க்கட்சியினர் தங்கள் சதிகாரர்களைத் தேசிய மக்கள் சக்தியினராக பாவித்து வன்முறைச் சம்பவங்களை உருவாக்கலாம் என்பதில் சந்தேகம் இருப்பதாகத் தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

"நாட்டில் வன்முறைச் சம்பவங்களைத் தேசிய மக்கள் சக்தி உருவாக்கும் என எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் அரசியல் மேடைகளில் தொடர்ந்து கூறிவருகின்றனர். .இந்த அரசியல் வாதிகள் தாமே வன்முறைகளை வெடிக்கச் செய்துவிட்டு அவற்றைத் தேசிய மக்கள் சக்தியே செய்ததாகக் கூறுவார்கள் என்ற சந்தேகம் எமக்கு உள்ளது" என ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா, வியாழக் கிழமை (12) இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கூறினார்.



தொடர்ச்சி P2



## படகை மோதி கவிழ்த்தனர்

**இலங்கை மீனவர்கள் குற்றச்சாட்டு**

இலங்கை கடற்படையினர் தங்களின் கப்பலை மோதி கவிழ்த்ததாகப் பாதிக்கப்பட்ட தமிழக மீனவர்களின் குற்றம்சாட்டியுள்ளனர்.

நாகை மாவட்டம் செருதூர் மீனவ கிராமத்தைச் சேர்ந்த தர்மன் என்பவருக்குச் சொந்தமான ஃபைபர் படகில் கடந்த 9 திகதியன்று அதே பகுதியைச் சேர்ந்த சக்திவேல், தேவராஜ், கார்த்திகேயன், சதீஷ் ஆகிய 4 மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர்.

தொடர்ச்சி P2



## சொல்லாமல் சென்ற OICக்கு வலைவீச்சு

தம்புத்தேகம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த பிரதான பொலிஸ் பரிசோதகர் கடந்த மூன்று நாட்களாக சேவையில் ஈடுபடவில்லை என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2



## கல்லடிப்பட்ட சிறுவனை தேடிச்சென்ற ஷிரந்தி

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் பிரசார கூட்டத்தின் மீது கற்கள் வீசப்பட்டதில் சிறுவன் ஒருவன் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஹம்பாந்தோட்டை சிறிபோபுர பிரதேசத்தில், புதன்கிழமை (11) நடைபெற்ற கூட்டத்தில் இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## "எமது முடிவில் எந்த மாற்றமும் இல்லை"



ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவை ஆதரிக்கின்ற முடிவில் எந்த மாற்றங்களும் இல்லை என இலங்கைத் தமிழரசுக் கட்சி மீண்டும் அறிவித்துள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதானிகள் குழு ஒன்று அண்மையில் கூடி இந்த முடிவு உறுதி செய்ததாக அதன் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் தமது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

சஜித் பிரேமதாசவைத் தவிர, ஏனைய எந்த வேட்பாளர்களுடனும் பேச்சுவார்த்தை எதுவும் நடத்தப் போவதில்லை எனவும் ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் மத்திய செயற்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை அமுலாக்குவது குறித்தே தற்போது ஆராயப்படுகிறது என்றும் சுமந்திரன் கூறியுள்ளார்.



## தபால் மூல வாக்களிப்பு நிறைவு

2024ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு வியாழக்கிழமையுடன் (12) நிறைவடையவுள்ளது.

தொடர்ச்சி P2

# "Times School of Higher Education" ஜனாதிபதியால் திறந்து வைப்பு

வரையறுக்கப்பட்ட விஜய பத்திரிகை நிறுவனத்துடன் இணைந்ததாக டைம்ஸ் உயர்கல்வி நிறுவனம் நிறுவப்பட்டு, மூன்று வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுடன் இணைந்து சர்வதேச தரத்திற்கு ஏற்ப கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

மூன்று முக்கிய தகுதிப் பிரிவுகளின் கீழ் பலதரப்பட்ட தொழில் சார்ந்த கற்கை நெறிகள் இங்கு வழங்கப்படுகின்றன. அதன்படி சான்றிதழ், டிப்ளமோ, உயர் டிப்ளமோ கற்கைகள் மற்றும் டிஜிட்டல் அகடமி ஊடாக தொழில்முறை திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் பட்டப்பின் படிப்புகள் இங்கு நடத்தப்படும்.

டைம்ஸ் உயர்கல்வி நிறுவனத்தின் செயல்பாடுகள் விஜய பத்திரிகை நிறுவனத்தினால் நியமிக்கப்படும் துறை சார்ந்த வல்லுநர்களைக் கொண்ட ஐந்து பேர் கொண்ட ஆலோசனைக் குழுவால் நிர்வகிக்கப்படும். இளைஞர்கள் எதிர்காலத்தில் பல வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் இணைவதன் மூலம் உலகத் தரத்திற்கு ஏற்ப தரமான கல்வியை உறுதி செய்வதே இதன் நோக்கம் என்று நிர்வாகக் குழு கூறுகிறது.

இதன் போது 'Times School of Higher எடுகேஷன்' என்ற புதிய இணையதளத்தையும் ஜனாதிபதி திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் கூறியதாவது,

"இன்று, நாம் எதிர்பார்க்கும் நவீன கல்வி முறைக்குரிய டைம்ஸ் உயர்கல்வி நிறுவனத்தைத் திறந்து வைத்தேன். உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் டிப்ளோமா கற்கைகளைத் தொடர விரும்பும் மாணவர்களுக்கு கல்வி வாய்ப்புகளை இந்த நிறுவனம் வழங்க இருக்கிறது.

ஏற்றுமதிப் பொருளாதாரத்தை நோக்கிச் செல்ல வேண்டுமானால், 21ஆம் நூற்றாண்டின் மத்தியில் எதிர்காலத்தை நோக்கிச் செல்வதாயின், நமது நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு புதிய அறிவு தேவைப்படுகிறது. எனவே, எதிர்காலத்தில் இதுபோன்ற பல நிறுவனங்கள் உருவாக்கப்பட வேண்டும். இந்த நிறுவனம் டிஜிட்டல் அகாடமியையும் கொண்டுள்ளது. இந்த கல்வி நிறுவனங்களால் நம் நாட்டு இளைஞர்கள் பெரிதும் பயனடையலாம்.

50,000 இளைஞர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் ஊடாக தொழில் பயிற்சி வழங்க அரசாங்கம் நிதியுதவி அளிக்கவுள்ளது. அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு இவ்வாறான நிறுவனங்களை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களாக மாற்றும் திறன் எங்களிடம் உள்ளது. தற்போதுள்ள பயிற்சி நிறுவனங்களுக்கு மேலதிகமாக இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம்.

மேலும், அடுத்த சில ஆண்டுகளில் நாட்டின் வளர்ச்சியுடன், முதலீட்டு வாய்ப்புகள் அதிகரித்து, புதிய தொழில்கள் ஆரம்பிக்கும்போது, அரச மற்றும் தனியார்த் துறைகளில் சுமார் 100,000 புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

மேலும் நாம் உருவாக்க நினைக்கும் டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு, இதுபோன்ற நிறுவனங்கள் அவசியம். எனவே, நமது நாட்டில் இதுபோன்ற கல்வி நிறுவனங்களை அரச மற்றும் அரச சாராத வகையில் அதிகரித்து, இந்த நாட்டின் இளைஞர்களுக்கு நல்ல வேலை வாய்ப்புகளைத் தேடுவதற்குத் தேவையான ஆதரவை வழங்க எதிர்பார்க்கிறோம்" என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்நிகழ்வில், கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த, இலங்கைக்கான நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் டேவிட் பைன் (H.E. David Pine), வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகள், ஜனாதிபதியின் காலநிலை மாற்றம் தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், டைம்ஸ் உயர்கல்விப் பாடசாலையின் பணிப்பாளர் பொறியியலாளர் ஜனக ரத்னகுமார உள்ளிட்ட நிர்வாக சபை உறுப்பினர்கள், விஜய பத்திரிகை நிறுவன தலைவர் ரஞ்சித் விஜேவர்தன உள்ளிட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)

## காலாவதியானவை சிக்கின

இந்த சுற்றிவளைப்புகளில் காலாவதியான அழகுசாதனப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் சேவை அதிகார சபையின் கம்பஹா மாவட்ட பிரிவு தெரிவித்துள்ளது.

இறக்குமதி விவரங்கள் இல்லாத அழகுசாதனப் பொருட்கள் மற்றும் விற்பனையிலிருந்து தடைசெய்யப்பட்ட அழகுசாதனப் பொருட்கள் என்பன மீட்கப்பட்டதுடன், தடை செய்யப்பட்ட அழகுசாதனப் பொருட்களை உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர் இன்றி அதிக விலைக்கு விற்பனை செய்த 14 வியாபாரிகள் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

தடைசெய்யப்பட்ட இந்த அழகுசாதனப் பொருட்களைப் பயன்படுத்தி அழகு சிகிச்சைகள் செய்யப்பட்ட சலூன்கள் ஆய்வு செய்யப்பட்டு அவற்றின் உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இவர்களுக்கு எதிராக மினுவாங்கொட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கம்பஹா நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

## படகை மோதி...

இந்த நிலையில், அவர்கள் கோடியக்கரைக்குத் தென்கிழக்கே மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களின் படகின் மீது கடற்படை கப்பலைக் கொண்டு மோதினர் என கூறப்படுகிறது.

கப்பல் மோதியதில் தமிழக மீனவர்களின் ஃபைபர் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இதில் கடலில் காயங்களுடன் வலைகளில் சிக்கி மீனவர்கள் தத்தளித்துள்ளனர். இதைத்தொடர்ந்து மீனவர்களை தங்களது கப்பலில் ஏற்றிய இலங்கை கடற்படையினர், அவர்களுக்கு முதலுதவி சிகிச்சை எதுவும் செய்யாமல் சுமார் 6 மணி நேரமாக அவர்களை மிரட்டி விசாரணை நடத்தியுள்ளனர்.

அப்போது, தங்கள் எல்லைக்குள் தான் மீன்பிடித்தோம் என தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படை அதிகாரிகளிடம் கெஞ்சியதாகக் கூறப்படுகிறது. அதன் பின்னர் அங்கு வந்த சக தமிழக மீனவர்களிடம் செருதூர் மீனவர்களை ஒப்படைத்த இலங்கை கடற்படை அதிகாரிகள், அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளனர். அதன் பின்னர் சக மீனவர்களின் உதவியோடு நடுக்கடலில் கவிழ்ந்த தங்களது படகை மீட்ட நாகை மீனவர்கள் காயங்களுடன் நேற்று காலை கரை திரும்பியுள்ளனர்.

இலங்கை கடற்படை அதிகாரிகள் கப்பலைக் கொண்டு மோதியதில், படகிலிருந்த வலை, ஜி.பி.எஸ். கருவி, கையடக்க தொலைபேசி, மீன் பிடி பொருள்கள் என 6.50 லட்சம் ரூபாய் மதிப்பிலான பொருள்கள் கடலில் விழுந்து மூழ்கியதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

## கோட்டாவிற்காக...

உமா ஓயா நீர்மின் நிலையம் மற்றும் சம்பூர் மின் உற்பத்தி நிலையம் என்பன நல்லாட்சி அரசாங்கத்தினால் குறித்த நேரத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தால், கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. நல்லாட்சி அரசாங்கம் இந்த திட்டங்களை வேண்டுமென்றே ஒத்திவைத்தது, இறுதியில் அந்த பழி கோட்டாபயவின் நிர்வாகத்தின் மீது விழுந்தது.

பங்களாதேஷ் பிரதமருக்கு ஏற்பட்ட கதியே கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் ஏற்பட்டுள்ளதாக நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

"எங்கள் தலைவர்களை வெளியேற்றச் சதி மேற்கொள்ளப்பட்டது, அதில் கோட்டாபய அரசாங்கம் சிக்கியது. பின்னர், நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்க நடவடிக்கை எடுத்தோம். நாங்கள் நிலைமையை ஸ்திரப்படுத்தினாலும், சில கொள்கைகள் எங்கள் நம்பிக்கைகளுடன் ஒத்துப்போகவில்லை. நாங்கள் அவற்றைப் பாராளுமன்றத்தில் ஆதரிக்க மறுத்து விட்டோம்," என்று அவர் கூறினார்.

பெரும்பாலான ஆலோசகர்கள் தேசியவாதத்தைக் கைவிட்டு போக்கைப் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். தேர்தல் முறைமையைப் பாதுகாக்கும் வகையில் செயற்படும். அதேவேளை, 13ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுமாறும் அவர்கள் ஆலோசனை வழங்கினர்.

இறுதியில், நாட்டை மேலும் பிளவுபடுத்தாத அரசியல் சக்தியை ஸ்தாபிப்பதற்கான தீர்மானத்தை எட்டினோம். வடமாகாணத்திற்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் வழங்கப்பட மாட்டாது என்பதை நாங்கள் தெளிவுபடுத்தினோம். அரசியல் அரசியல் ரீதியாக எங்களைக் காயப்படுத்தினாலும், நாட்டுக்குத் தீங்கு விளைவிக்கும் முடிவுகளை நாங்கள் எடுக்க மாட்டோம் என்று நம்புங்கள்.

## "சொன்னால் கைது"

என்றும், வாக்களித்ததன் பின்னர் யாருக்கு வாக்களித்தீர்கள் என்பதைப் பகிரங்கமாகச் சொன்னால், அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்று கூறினார்.

'சுதந்திரமானதும் மற்றும் நியாயமானதுமான ஜனாதிபதி தேர்தலில் ஊடகங்களின் வகிபாகம்' எனும் தொனிப்பொருளில் இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தால் ஏற்பாடு செய்திருந்த விசேட கருத்தரங்கு, கொழும்பிலுள்ள இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் கேட்போர் கூடத்தில், வியாழக்கிழமை (12) பிற்பகல் நடைபெற்றது.

அதில், கலந்துகொண்டு கருத்துரையை வழங்கியதன் பின்னர், கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பதிலளித்து கருத்துரைக்கையில், வாக்களித்ததைக் கையடக்க தொலைபேசியில் படமாக எடுத்து பொதுவெளியில் பகிர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டு, சட்டத்தின் பிரகாரம் அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

வாக்களிப்பு நிலையங்களுக்குள் படங்களை எடுக்கத் தடை செய்யப்பட்டுள்ளது. வேட்பாளர்களை படம் பிடிக்க அனுமதி பெற்ற ஊடகவியலாளர்கள் படம் பிடிக்கலாம். எனினும், அதனை, 21 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு பின்னரே பயன்படுத்த வேண்டும்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகள், 18ஆம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடையும். அதற்கு பின்னர் 48 மணி நேரம் மௌன காலம், அக்கால பகுதிக்குள் எவ்விதமான பிரசார நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியாது. ஊடகங்களும், தேர்தல்கள் ஆய்வு நிகழ்ச்சிகளை முன்னெடுக்க முடியாது.

தபால்மூல வாக்குப்பதிவில், தங்களுடைய வேட்பாளர்தான் முன்னிலையில் இருக்கின்றனர் என்ற செய்தி பரப்பப்பட்டுள்ளது. அது தவறானது. அவ்வாறான சமூக வலைத்தளங்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சில வலைத்தளங்களில் வெளிநாடுகளிலிருந்து இயக்கப்படுவதால், கட்டுப்படுத்துவது கடினமாக உள்ளது. எனினும், பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து போலி செய்திகளைத் தடுத்துள்ளோம் என்றார்.

வாக்களிப்பு நிலையங்களுக்கு மட்டுமன்றி, வாக்கெண்ணும் நிலையங்களுக்கு அலைபேசிகளை எடுத்துச் செல்ல முடியாது. ஒவ்வொரு வாக்கெண்ணும் நிலையங்களுக்கு ஒரு வேட்பாளருக்கு ஐவர் என்ற அடிப்படையில், 38 வேட்பாளர்களுக்கும் 190 பேரும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் 40 பேரும் பிரசன்னமாய் இருப்பார்கள்.

சாதாரண அறையொன்றில் வாக்கு எண்ணும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும். மேலே குறிப்பிட்ட அத்தனை பேரும், ஒருவர், மற்றொருவரின் தலைக்கு மேலே எட்டிப் பார்க்க வேண்டும். இவ்வாறு எட்டிப்பார்க்கும் ஒரு வேட்பாளரின் பிரதிநிதி அந்த அறையிலிருந்து வெளியே வந்து தான் பிரதிநிதித்துவப்படுத்தும் வேட்பாளர் பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையைக் கூறலாம். அந்த எண்ணிக்கையில் இலக்கங்கள் மாறுபடலாம். ஆகையால், உத்தியோகப்பூர்வமாகப் பெறுபேறுகள் வெளியிடுவதற்கு முன்னரான உத்தியோகப்பூர்வமற்ற பெறுபேறுகளை வெளியிடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

கருத்துக்கணிப்புகளை வெளியிட வேண்டாம் என கேட்டுக்கொண்ட அவர், விளம்பரம் தொடர்பிலும் அவதானமாக இருக்க வேண்டும். அத்துடன் போலி செய்திகளையும், மக்களிடையே குரோதங்களை ஏற்படுத்தும் செய்திகளையும் வெளியிடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

## சொல்லாமல் சென்ற...

தொடர்ந்து கடமையாற்றுவது கடினம் என பொலிஸ் புத்தகத்தில் குறிப்பு ஒன்றை எழுதிவிட்டு பொலிஸ் நிலையத்திலிருந்து வெளியேறியுள்ளதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எனினும் குறித்த பொலிஸ் அதிகாரியைத் தேடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அவர் எங்கிருக்கிறார் என்பது குறித்த தகவல்களை அறிய, பொலிஸ் உளவுத்துறை அதிகாரிகளும் களமிறக்கப்படுவதாக பொலிஸ் வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

இந்த பிரதான பொலிஸ் பரிசோதகர் தொடர்பில் நேற்று வரை எவ்வித தகவலும் கிடைக்கவில்லை என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வெலிக்கடை பொலிஸ் நிலைய கட்டளைத் தளபதியாகக் கடமையாற்றிய அவர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டு பின்னர் மீண்டும் பதவியேற்று கோட்டை பொலிஸ் நிலைய கட்டளைத் தளபதியாகப் பொறுப்பேற்றார்.

மேலும் இவர் பல மாதங்களுக்கு முன்னர் தம்புத்தேகம தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## கிழக்கில் சுற்றுலாத் துறையை மேம்படுத்த பறக்கும் கப்பல் சேவை

கிழக்கு மாகாணத்தின் சுற்றுலாத் துறையை மேலும் அபிவிருத்தி செய்யும் நோக்கில் பறக்கும் கப்பல் (Air-Ship) சேவையை ஆரம்பிப்பதற்குக் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்காகத் தெற்காசியாவிலேயே முதன் முறையாகக் கிழக்கிலங்கையில் Air-Ship சேவையை ஆரம்பிக்கும் ஒப்பந்தத்தில் சர்வதேச Air Space நிறுவனம் மற்றும் கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகம் என்பன கைச்சாத்திட்டுள்ளன.

இந்நிகழ்வு வியாழக்கிழமை(12) கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் இடம்பெற்றுள்ளது. அதில், கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்தின் சார்பில் அதன் தவிசாளராக மதனவாசன், சர்வதேச Air Space நிறுவனத்தின் தலைவர் ஷுகரேவ் செர்ஜி நிகோலாவிச் ஆகியோர் கையொப்பமிட்டனர்.



இதன் பிரகாரம் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்தில் நிலாவெளி, மட்டக்களப்பில் மாவட்டத்தில் பாசிக்குடா, அம்பாறை மாவட்டத்தில் அருகம்பே போன்ற சுற்றுலாத் தளங்களின் இயற்கை அழகை ரசிக்கும் வகையிலும் பயணத்தை இலகு படுத்தும் நோக்கிலும் பறக்கும் கப்பல் சேவை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வின்போது சர்வதேச Air Space நிறுவனத்தின் தலைவர் ஷுகரேவ் செர்ஜி நிகோலாவிச் கருத்து தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தில் கடந்த ஒன்றரை வருடமாக ஆளுநர் செந்தில் தொண்டமானால் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்ய முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள் வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்வதை அவதானிக்க முடிந்தது.

அவர் இங்கு Air-Ship சேவையை ஆரம்பிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். அதற்கு அமையக் கடந்த ஒரு மாத காலமாக எமது நிறுவனத்தின் அதிகாரிகள் இங்கு வந்திருந்து ஆய்வுகளை மேற்கொண்டனர். அந்த ஆய்வு அறிக்கையின் படி இவ்வேலைத் திட்டத்திற்கு நல்ல வரவேற்பு உள்ளது என்பதை அறிந்து அதற்காக முதலீடு செய்ய முன்வைத்துள்ளோம் என்று குறிப்பிட்டார்.

## தபால் மூல வாக்களிப்பு நிறைவு

தபால் மூல வாக்களிப்புக்காக வழங்கப்பட்ட செப்டெம்பர் மாதம் 4, 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் வாக்களிக்க முடியாத அனைத்து அரச ஊழியர்களுக்கும் வாக்களிக்க புதன்கிழமையும்(11) வியாழக்கிழமையும்(12) மேலதிக நாட்கள் வழங்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பித்த எந்தவொரு அரசாங்க ஊழியர்களும் இனிமேல் தபால் மூல வாக்குகளைப் பயன்படுத்த முடியாது என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## "செப்டெம்பர் 18க்கு பின் வன்முறைகள் வெடிக்கலாம்"

செய்தியாளர் சந்திப்பில் கூறினார்.

இவ்வாறான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றதாகக் கூறுபவர்களிடம் இருந்து வாக்குமூலங்களைப் பதிவு செய்து, அது எவ்வாறு அவர்களுக்குத் தெரிய வந்தது என்பதைக் கண்டறிந்து, குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்புப் படையினரிடம் சில்வா கோரிக்கை விடுத்துள்ளார்.

"செப்டம்பர் 18க்கு பிறகு தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது.

அந்த காலகட்டத்தில் அரசியல் கட்சிகள் பற்றிப் பேச ஊடக நிறுவனங்களும் சிரமங்களை எதிர்கொள்ளும்.

அப்போது இந்த அரசியல்வாதிகள் தங்கள் சதிகாரர்களை பயன்படுத்தி தேசிய மக்கள் சக்தியாகக் காட்டிக்கொண்டு வன்முறைச் சம்பவங்களை உருவாக்குவார்களா என்ற சந்தேகம் எங்களுக்கு உள்ளது. கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்காக ஈஸ்டர் தாக்குதலை உருவாக்கியவர்களுக்கு இது பெரிய விடயம் அல்ல" என்றார்.

## கல்லடிப்பட்ட சிறுவனை தேடிச்சென்ற ஷிரந்தி

இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட சிறுவன், காயமடைந்து ஹம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஹம்பாந்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட சிறுவனை நாமல் ராஜபக்ஷவின் தாயார் சிரந்தி ராஜபக்ஷ நேரில் சென்று நலம் விசாரித்துள்ளார்.

இந்த பொதுக்கூட்டத்தில் நாமல் ராஜபக்ச, சமல் ராஜபக்ஷ, ஷிரந்தி ராஜபக்ஷ ஆகியோர் பங்கேற்கவிருந்தனர். கூட்ட அரங்கின் மீது சுமார் மூன்று கற்கள் வீசப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# “திசைக்காட்டியில் மறைந்தாலும் மணியை விடவில்லை”

வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்வதற்காக அரசாங்கத்தின் பதிவு செய்யப்பட்ட குற்றவாளிகள் பாஸ்போர்ட் போட்டோவை மாற்றி, வேறு பெயரில் விசா பெற்று செல்வது போன்று, இன்று இதே திட்டத்தை மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) திசைகாட்டி என தனது முன்னைய முகத்தை மறைத்து, அவ்வாறான வேலைத்திட்டத்தை பின்பற்றி மக்களிடம் வலம் வருவதாக முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி. தனது நிறத்தையும் அடையாளத்தையும் மாற்றிக் கொண்டு திசைக்காட்டியில் இருந்து மறைந்தாலும் அவர்கள் மணியையும் சிவப்பு நிறத்தையும் கைவிடவில்லை என்றும் அவர் கூறினார்.

சுயேச்சை வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கவை ஆதரித்துக் கண்டி ஈ.எல்.சேனாநாயக்க நூலக கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை(10) நடைபெற்ற கூட்டத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், அரசியல் மேடைகளில் ரணில் விக்ரமசிங்கவுக்கு முதுகெலும்பு இல்லை என்று நாம் எப்போதும் கூறி வருகிறோம். நாடு ஆபத்தில் இருக்கும் போது ரணில் விக்ரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்காமல் இருந்திருந்தால் இன்று பங்களாதேஷ் எதிர்கொண்டிருக்கும் கதியை எமது நாடும் சந்தித்திருக்கும்.

அப்போது நாடு ஆபத்தில் இருக்கும் போது, தலைவராக நின்று நாட்டைக் கைப்பற்ற முன்வரும் போது, முதுகெலும்பு இருப்பதா இல்லையா என்பதை அறிந்திருந்தோம் .

நாம் எவ்வளவுதான் மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்களாக இருந்தாலும், இக்கட்டான காலத்தில் இந்த நாட்டை கட்டியெழுப்பிய தலைவருக்கு ஆதரவளிக்க வேண்டும். நாமல் கேட்டதால் எங்களால் ஒன்றும் செய்ய முடியாது. இந்த பிரச்சினை அவருடைய சிறிய தந்தையினாலும் எங்களாலுமே ஏற்பட்டது.

எங்களிடம் ஆட்சி அதிகாரம் இருந்தது. ஈஸ்டர் தாக்குதலின் போது மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்தார். அவர் வெடிகுண்டை வெடிக்கவைக்கவில்லை என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், வெடிகுண்டுகள் வெடிக்கும் அளவுக்கு நாட்டின் பாதுகாப்பு சீர் குலைந்ததற்கு அவரே பொறுப்பேற்க வேண்டும். அதேபோல், கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியிலிருந்த போது, ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கும் நாமே பொறுப்பேற்க வேண்டும்.



அந்த காலத்தில் செய்ய முடியாததொன்றை தற்பொழுது நாமல் ராஜபக்ஷவிற்கு வழங்கப்பட்டுள்ளது என்பதால் அதில் எந்த மாற்றமும் அடையப்போவதில்லை.

ரணில் என்ன செய்தார் என்று பார்த்தோம். இதைச் செய்ய அவரைத் தவிர வேறு யாரும் இல்லை. சில சிறுவர்கள் ஜனாதிபதி மாளிகையின் வாயிலை உடைக்கச் சென்ற போது ஜனாதிபதி கப்பலில் ஏறி நடுக்கடலுக்கு சென்றார். அவர் அப்படி ஓடிப்போவதற்கு எந்த காரணமும் இல்லை. நாடு அழியும் போது, நாட்டை விட்டு வெளியேறுவது தவறு. இது பொறுப்பை மீறுவதாகும். ரணில் விக்ரமசிங்கவுக்கு 20 மில்லியன் டொலர்களுடன் காலியான திறைசேரியை பொறுப்பேற்றுக்கொண்டார்.

எமது எம்.பிக்களின் 70 வீடுகள் எரிக்கப்பட்டதுடன், ஒரு எம்.பியை வீதியில் இழுத்துச் சென்று நாயைப் போல் கொன்றனர்.

லால்காந்த, ஹதுன்நெத்தி போன்றவர்கள், “பாராளுமன்றத்திற்குச் சென்று பாராளுமன்றத்தைத் தீயிட்டுக் கொளுத்த வாருங்கள்” என மக்களை அழைத்தனர்.

இப்படித்தான் இவர்கள் பிரச்சினைகளைத் தீர்க்கிறார்கள். 1971ஆம் ஆண்டு போலவே, 1988ஆம் ஆண்டிலும் துப்பாக்கியைத் தலையில் வைத்து அதிகாரத்தைக் கேட்டுள்ளனர். வாக்கு மூலம் ஆட்சியைப் பிடிக்காமல், பலவந்தமாக ஆட்சியைப் பிடிக்க முயன்றனர்.

ஒவ்வொரு கிராமத்திலும் ஜே.வி.பியால் கொல்லப்பட்டவர்கள் குறைந்தது ஐந்து பேராவது இருப்பார்கள் அப்படியிருந்த இவர்களுக்கு வாக்களிப்பீர்களா? இந்த ஆத்மாவில் மாவின் திசைக்காட்டிக்கு ஆட்சியைப் பெற முடியாது. ஏனெனில், கிராமங்களில் உள்ள மக்களின் கண்ணீருக்குப் பிறகு இவர்களுக்கு யார் வாக்களிப்பது?

இ.போ.ச. வண்டி ஓடினால், சாரதி சுட்டுக் கொல்லப்படுவார். எத்தனை தோட்ட அதிகாரிகளை இவர்கள் கொன்றார்கள்? விடுதலைப் புலிகள் தனி நாடு கோரி யுத்தம் செய்தார்கள், ஆனால், ஜே.வி.பி. அரசாங்கத்தைக் கோரி யுத்தம் செய்தது.

ஆகவே, இந்த நேரத்தில், இதயத்தால் வாக்களிக்காமல் சரியாக மூளையினால் சிந்தித்து வாக்களிக்குமாறு மக்களைக் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.



## அரசியல் மேடையில் மோதல்

எஸ்.அஷ்ரப்கான்

சாய்ந்தமருதில் ‘இயலும் ஸ்ரீலங்கா’ ஜனாதிபதி வேட்பாளர் ரணிலை ஆதரித்து புதன்கிழமை(11) மாலை இடம்பெற்ற கூட்டம் நிறைவு பெற்ற பின்னர், இரு குழுக்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

இதனால் குறித்த வளாகத்தில் சில நேரம் பதற்றம் ஏற்பட்ட நிலையில், சம்பவ இடத்திற்கு பொலிஸாரை வரவழைக்கப்பட்டு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஜனாதிபதியுடன் முண்டியடித்துக்கொண்டு கைலாகு கொடுக்கும் போது, ஏற்பட்ட வாய்த்தர்க்கமே இந்த குழு மோதலுக்குக் காரணம் என தெரியவந்துள்ளது.



## எழுத்தறிவு தின நிகழ்வு

அஸ்லம் எஸ்.மௌலானா

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கரைவாகு மேற்கு நற்பிட்டிமுனை பொது நூலகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த உலக எழுத்தறிவு தின சிறப்பு நிகழ்வு நூலக மண்டபத்தில் வியாழக்கிழமை (12) நடைபெற்றது.

கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம்.நௌபீஸின் ஆலோசனையின் பேரில், உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீமின் வழிகாட்டலில் நூலக வாசகர் வட்டத்தின் ஒத்துழைப்புடன் ஒழுங்கு செய்யப்பட்டு, நூலகர் எஸ்.எம்.ஆர்.அமினுதீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இரண்டு சமாதான பாலர் பாடசாலைகளைச் சேர்ந்த 40 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## தேர்தல் கண்காணிப்பு குழுவினர் மன்னார் விஜயம்

எஸ்.ஆர்.லெம்பேட்

ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழுவினர் புதன்கிழமை (11) மாலை மன்னாருக்கு விஜயம் செய்தனர். இதன் போது பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனை அவருடைய மன்னார் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

தற்போதைய ஜனாதிபதித் தேர்தல் மற்றும் தற்போதைய சூழ்நிலைகள் தொடர்பாகவும் பாராளுமன்ற உறுப்பினரிடம் கேட்டறிந்து கொண்டதுடன் இதன்போது இலங்கை தமிழரசு கட்சியின் மன்னார் மாவட்டச் செயலாளர் ஜஸ்ரின் துரம் அவர்களும் இச் சந்திப்பில் கலந்து கொண்டுள்ளார்.



## “ரணிலின் தேர்தல் இயக்கத்தில் அரச ஊழியர்கள் உள்ளனர்”

ரணில் விக்ரமசிங்கவின் தேர்தல் இயக்கத்தின் மேம்பாட்டுப் பணிகளுக்காக அரச ஊழியர்கள் ஈடுபடுத்தப்படுவது முனைப்பான ஒரு விடயமாக அமைந்துள்ளது என தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் கண்காணிப்பு நிலையத்தின் பிரதானி இளைப்பாறிய பிரதிப் பொலிஸ் மா அதிபர். டீ.கஜசிங்க தெரிவித்தார்.




ஜனாதிபதித் தேர்தல் பிரகடனம் செய்யப்பட்டுள்ள தருணத்தில் செய்ய வேண்டிய மற்றும் செய்யக்கூடாத செயல்கள் ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்வதற்கான சட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்க வாகனங்களும் உத்தியோகத்தர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். இதனை ஏற்பாடு செய்தவர் ரணவிரு சேவா அதிகார சபையின் தலைவராவார். அதைப்போலவே அரசாங்கத்திற்குச் சொந்தமான வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் எல்.ஆர்.டி.சி. பாதுகாப்பு கம்பெனியின் ஊழியர்களையும் கடமைக்கு சமூகமளித்த பின்னர் இந்த மாநாட்டில் பங்கேற்குமாறும் போக்குவரத்து வசதிகளை வழங்குவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## பொது மன்னிப்பின் கீழ் விடுதலை

க.அகரன், ஜவ்பர்கான்

தேசிய சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு, நாடளாவிய ரீதியில் 359 சிறைக் கைதிகள் ஜனாதிபதியின் விசேட பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைய வவுனியா சிறைச்சாலையிலிருந்து 17 கைதிகளும் மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து 11 கைதிகளும் திருகோணமலை சிறைச்சாலையிலிருந்து 8 கைதிகளும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சிறிய குற்றங்கள் மற்றும், சிறிய அபராத தொகையைச் செலுத்தத் தவறிய சிறைக்கைதிகளே இவ்வாறு பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டனர்.






## எச்சரிக்கை!



நேரடி:

சிறுத்தைகள் அண்மையில் வலையில் பிடிபட்டு கொல்லப்பட்ட சம்பவங்கள் குறித்து இது பொதுமக்களுக்கு ஒரு உத்தரவு.

காட்டு விலங்குகளை பிடிக்க மற்றும் / அல்லது கொல்ல எந்தவகையான வலைகள் / பொறிகளை அமைத்தல் சட்டவிரோதமானது.

எந்தவொரு நபரின் நிலம் அல்லது சாகுபடிநிலம் அல்லது அந்த உரிமையாளருக்கு அருகிலேயே காணப்படும் பொறிகள் / வலைகள், அதன் அமைப்பிற்கு பொறுப்பேற்கப்படுவார் மற்றும் சட்டப்படி வழக்கு தொடரலாம் / அபராதம் விதிக்கப்படலாம் / சிறையில் அடைக்கப்படலாம்.

இந்த சட்டவிரோத செயலில் ஈடுபட்ட அனைத்து நபர்களையும் இதுபோன்ற பொறிகளை / வலைகளை உடனடியாக அகற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம். இது போன்றவற்றை மீண்டும் அமைப்பதைத் தவிர்க்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவிக்குமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்

அத்தகைய பொறிகள் / வலைகள் உங்களுக்குத் தெரிந்திருந்தால் அல்லது நிலப்பரப்பில் அவற்றைக்கண்டால் எந்தவொரு காட்டுமிருகத்திற்கும் மேலும் காயம் / இறப்பைத் தடுப்பதற்காக அதை உடனடியாக அகற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்

காயமடைந்த:. பொறியில் சிக்கிய சிறுத்தை அல்லது வேறு வன ஜீவராசிகளுக்கு அண்மையில் செல்ல வேண்டாம் என தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம். இது மிருகத்துக்கு பயம் மற்றும் மேலதிக காயங்களை ஏற்படுத்தும். தயவுசெய்து மிருகத்துக்கு அண்மையில் செல்ல வேண்டாம்..

| பொறிகளை / வலையை அமைப்பதற்கான சட்டம் | அபராதம் | சிறைச்சாலை |
| --- | --- | --- |
| பொறிகளை / வலையை அமைப்பதற்கான சட்டம். தாவர மற்றும் விலங்குகள் பாதுகாப்பு கட்டளை / வனவிலங்கு சட்டம் | ரு .30,000.00-100,000.00 | 2-5 ஆண்டுகள் |
| விலங்குகளுக்கு கொடுமை சட்டம் | சிறைத்தண்டனை | 6 மாதங்கள் வரை |

வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம்
வனப்பகுதி மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு அறக்கட்டளை (wwct.org)
மலை நாட்டு சிறுத்தை ஆகியவற்றுடன் இணைந்து பாதுகாப்பு முயற்சி

துரித இலக்கம் 1992

# விஞ்ஞாபனங்களுக்கு மத்தியில் மத்திய வங்கியின் சுயாதீனத்தன்மை

இலங்கை மத்திய வங்கியின் சுயாதீனத்தன்மையை உறுதி செய்யும் வகையில், 2023ஆம் ஆண்டில் புதிய சட்ட விதிமுறைகள் இயற்றப்பட்டிருந்தன. அதனூடாக மத்திய வங்கியின் சுயாதீனத்தன்மை, பொறுப்புக்கூரல், பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் செயற்பாடுகள் போன்ற நடவடிக்கைகள் உறுதி செய்யப்பட்டிருந்தன.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான அவசர நிதி நிவாரணத் திட்டத்தின் நிபந்தனைகளின் ஒரு அம்சத்தை நிறைவேற்றுவதாக இந்த மத்திய வங்கியை சுயாதீனப்படுத்தும் நடவடிக்கை அமைந்திருந்தது.

புதிய மத்திய வங்கி சட்டத்தினூடாக, விலை உறுதிப்படுத்தலை ஏற்படுத்த முடிந்ததுடன், நாணயக் கொள்கை தீர்மானங்களில் அரசியல் தலையீடுகளை இல்லாமல் செய்து, நாணய மாற்று வீதங்களை உறுதிப்படுத்துவது, குறைந்த வட்டி வீதங்கள் மற்றும் நீண்ட கால பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிப்பது போன்ற நாணயக் கொள்கை தீர்மானங்களைச் சுதந்திரமாக மேற்கொள்ளும் அதிகாரத்தை மத்திய வங்கிக்கு வழங்கியிருந்தது. ஆனாலும், இந்தக் கொள்கைக்கு தேசிய மக்கள் சக்தி தமது கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்ததுடன், இந்த சட்டமூலத்துக்கு எதிராகவும் வாக்களித்திருந்தனர்.

தேர்தல் கால வாக்குறுதிகளில் மத்திய வங்கியின் சுயாதீனத்தன்மை தொடர்பாகவும் பேசப்பட்டிருந்தது. சில வாரங்களுக்கு முன்னதாக இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விவாதத்தின் போது, தேசிய மக்கள் சக்தியின் கலாநிதி. ஹர்ஷன சூரியப்பெருமவிடம் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி. ஹர்ஷ டி சில்வா இந்த சட்டத்தை நீக்குவதற்கு தேசிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டதற்கு, ஹர்ஷன தெளிவான பதிலை வழங்கவில்லை. நாணயக் கொள்கை எவ்வாறு செயலாற்றும் என்பது தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார நிபுணருக்குத் தெளிவான புரிந்துணர்வு காணப்படவில்லை என்பது புலப்பட்டது.

இதேவேளை, தேசிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் கொள்கையில் நாணயக் கொள்கை வீதங்களைப் பொருளாதார வளர்ச்சிக்குச் சாதகமான முறையில் பேணுவது தொடர்பில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பணியாற்றிய காலப்பகுதியில் டபிள்யு.டி.லக்ஷ்மன் மற்றும் அஜித் நிவார்ட் கப்ரால் போன்றவர்கள் நவீன நாணயக் கொள்கை போன்ற உறுதி செய்யப்படாத கொள்கைகளைப் பின்பற்றி, அதன் மோசமான விளைவுகளை மக்கள் அனுபவித்திருந்தனர்.

தற்போதைய கட்டமைப்பில் மத்திய வங்கி விலை உறுதிப்பாட்டை எய்துவது எனும் பிரதான இலக்கை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளது. இவ்வாறான நிலையில், மத்திய வங்கியின் தீர்மானம் எடுத்தல்களில் அரசியல் தலையீடுகள் என்பது மீண்டும் நாட்டை பின்தங்கிய நிலைக்கே கொண்டு செல்வதாக அமையும்.

அதேபோன்று, மத்திய வங்கியின் ஆளுநரும் தற்போதைய ஜனாதிபதிக்கு ஆதரவாக பொது சந்திப்புகளில் கருத்துத் தெரிவிப்பதைத் தவிர்த்துக் கொள்வது, மத்திய வங்கியின் சுயாதீனத் தன்மையை மேலும் உறுதி செய்யும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

உரிமை என்பது தமக்கானது மட்டும் எனும் எண்ணம் ஆள்பவர்களுக்கு உருவாகிவிட்டது. அத்துடன் சுதந்திரமும் தங்களுக்கான சொத்து என வெளிப்படையாகக் காட்டுகின்றனர். நடத்தையில் நீதி, நியாயம் அறவே இல்லை.

தங்கள் செயல்களில் இறுமாப்பு அடைகின்றவர்கள், எதிர்காலத்தின் தாக்கங்களை உணர்வதே இல்லை. உலக மாற்றங்கள் இயல்பானவை. சர்வாதிகாரம் என்பது வெறும் புஷ்வாணம் ஆகும் என்பதை உணர்கின்றார்கள் இல்லை. மக்கள் பலம் பற்றி அறியாமல் இருப்பது வீழ்ச்சியைத் தரும்.

இத்தகையவர்கள் தங்களைத் தாங்களே இழக்கின்றார்கள். கற்பனையில் பல அரசாங்கங்கள் இயங்குகின்றன. மக்கள் குரல்கள் இவர்களுக்குக் கேட்கவில்லை என நடிக்கிறார்கள்.

எதுவும் நிரந்தரம் இல்லை. பொய்மை கருகிவிடும். கர்மா எவரையும் விட்டுவிடாது. கர்மா, செய்த தவறுகளுக்குத் தண்டனை வழங்கும்.

இயற்கை நியதிகூட, 'கர்மா' என்பதில் ஐயம் இல்லை. ஆண்டவன், துட்டர்களை மன்னிப்பதும் இல்லை; மறப்பதும் இல்லை.

நன்றி– பருத்தியூர் பால.வயிரவநாதன்

## போரின் முடிவின் 15 ஆண்டுகளின் பின் – 17

# சமாதானத்திற்கான போரரசியல்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலங்கையில் சமாதானத்திற்கான போராட்டத்தில் அரச இயக்கவியலும் அரச உயர்குடியினருக்கும் இடையிலான உறவு முக்கிய பங்கு வகித்தது. தங்கள் அரசியல் அதிகாரத்தைப் பாதுகாப்பதற்கும், பலப்படுத்துவதற்கும் ஆளும் உயரடுக்கினரால் எதிர்கொள்ளப்படும் பல போராட்டங்கள் மற்றும் சமூக மற்றும் பொருளாதார நகர்வுகள் சமாதானத்திற்காக அரசியலின் முக்கிய புள்ளிகளாம்.

இதை விளங்கிக்கொள்வதற்கு 1994 முதல் இலங்கையில் சமாதானத்திற்கான முன்னெடுப்புகளின் அரசியலை நாம் நோக்க வேண்டும். 1994 முதல் 1999 வரையிலான காலப்பகுதியில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிலான ஆட்சி, 'அமைதியான வழிகளில் சமாதானம்' என்ற தாரத மந்திரத்தின் அடிப்படையில் சமாதான முயற்சிகளை முன்னெடுத்தது. 1999-2002 காலப்பகுதியில் அது அரசியல் சமாதானம் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட யுத்தத்தின் சகவாழ்வு பற்றிய கதையாடலாக இருந்தது. 2002-2004 காலத்தில் பிரதமர் ரணிலின் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் நவதாராளவாத சமாதானத்திற்கான கதையாடலாகவும், கடைசியாக 2006 முதல் 2009 வரை, ஜனாதிபதி மஹிந்தவின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் கீழ், பயங்கரவாதத்திற்கு எதிரான போர், சமாதானத்திற்கான போர், முழு யுத்தம் மற்றும் மனிதாபிமானப் போர் ஆகியவற்றின் ஒட்டுமொத்த உரையாடலாக அது விரிந்தது. இலங்கையின் சமாதான முயற்சிகளோடு போரரசியல் இரண்டறக் கலந்துள்ளது.

1994-1999 காலகட்டத்தில், இலங்கையின் அன்றாட சமூக உரையாடல்களில், 'அமைதி' என்பது சமூகத்தின் பல்வேறு பிரிவுகளுக்குப் பல்வேறு அர்த்தங்களைக் கொண்டிருந்தது. எவ்வாறாயினும், குமாரதுங்கவின் தேர்தல் பிரசாரத்தின் போது, விடுதலைப் புலிகளுடனான ஆயுத மோதல் தொடர்பாக 'சமாதானம்' என்ற சொல் வெளிப்படையாகப் பயன்படுத்தப்பட்டது. மேலும், 'அமைதி' எப்போதும் ஒரு இறுதி நிலை காட்சியாகவும், குறிப்பாக சிக்கலான பொருளாதார வளர்ச்சியின் பார்வையில் பல சமூக, பொருளாதார மற்றும் அரசியல் இலக்குகளை அடைவதற்கான முன்னிபந்தனையாகவும் முன்வைக்கப்பட்டது.

தேர்தலுக்கு முன்னதாக, 'அமைதி' என்ற சொல்லுக்கு இனங்களுக்கிடையேயான அமைதி, குறிப்பாக சமூக அமைதி தவிர வேறு அர்த்தங்கள் இருந்தன. ஜே.வி.பியின் தலைமையிலான இரண்டாவது அரச எதிர்ப்பு இயக்கத்தை ஆதரித்த நாட்டின் இளைஞர்களுக்கு எதிராக பிரேமதாச காலத்தில் நடத்தப்பட்ட நேரடி உடல் ரீதியான வன்முறைகளுக்கு வழக்கமான சாட்சிகளாக இருந்த பலருக்கு அமைதி என்பது முக்கியமானதாக இருந்தது. இவ்வாறான வன்முறையை முடிவுக்குக் கொண்டுவருவது என்பது குமாரதுங்க, குறிப்பாக நாட்டின் இளைஞர்களுக்கு வழங்கிய மற்றொரு முக்கிய வாக்குறுதியாகும். கடனில் சிக்கிய கிராமப்புற விவசாயிகள் அனுபவிக்கும் கட்டமைப்பு வன்முறையை முடிவுக்குக் கொண்டுவருவதாகவும் அவரது பொருளாதார நிகழ்ச்சி நிரல் உறுதியளித்தது.

ஆரம்பத்தில், குமாரதுங்க, சோசலிச, தாராளவாத மற்றும் முதலாளித்துவச் சாய்வுகளுடன் பல்வேறு உயரடுக்கு அரசியல் பிரிவுகளை ஒன்றிணைக்க முடிந்ததால், அரசியல் ஐக்கியத்தின் அடையாளமாகவும் கருதப்பட்டார். அவரது தேர்தல் பிரசாரம் ஒரு சோசலிச-சார்பு தொனியை கொண்டிருந்தாலும், பதவி ஏற்றதும், உள்நாட்டு மற்றும் சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் யதார்த்தங்கள் காரணமாக, அவர் தனக்கு முந்தைய ஐ.தே.கவின் அதே நவதாராளவாத பொருளாதார நிகழ்ச்சி நிரலைப் பின்பற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவரது தலைமையின் கீழ், மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகளில் ஒன்று, தேசிய சொத்துக்களை தனியார்மயமாக்குவது ஆகும். இது தேர்தல்களின் போது அவர் வாக்குறுதியளித்த சோசலிச பொருளாதார நிகழ்ச்சி நிரலிலிருந்து அவர் முன்கூட்டியே விலகுவதைக் குறிக்கிறது. முந்தைய ஆட்சியிலிருந்து அவர் பெற்ற பொருளாதாரத்தின் நிலையைக் கருத்தில் கொண்டு, பெரிய பொருளாதாரப் பிரச்சனைகளைச் சமாளிக்கவும், அரச மூலதனக் குவிப்பு செயல்முறையின் கட்டுப்பாட்டை மீண்டும் பெறவும் இந்தப் பாதையைப் பின்பற்றுவது அவசியம் என்று நியாயப்படுத்தப்பட்டது. அரசு சொத்துக்களை தனியார் மயமாக்குவதற்கு எதிரான விமர்சனங்களைத் திசைதிருப்ப, அவரது அரசாங்கம் இந்த செயல்முறையை 'மனித முகத்துடனான தனியார்மயமாக்கல்' அல்லது 'மக்கள் மயமாக்கல்' என்று மறு பெயரிட்டது.

குமாரதுங்கவின் பொருளாதார நிகழ்ச்சி நிரல் பெரும்பாலும் தாராளவாத எண்ணம் கொண்ட உயரடுக்கு மற்றும் வணிக உயரடுக்கின் குழுவால் வடிவமைக்கப்பட்டது. இது விடுதலைப் புலிகளுடனான அரசியல் பேச்சுவார்த்தைகளை உள்ளடக்கிய அவரது அரசியல் நிகழ்ச்சி நிரலுடன் உறுதியாகப் பிணைக்கப்பட்டது. அக்காலப்பகுதியில் ஐ.நா. பொதுச் செயலாளரான பூட்ரஸ் பூட்ரஸ் காலியின் 'அமைதிக்கான நிகழ்ச்சி நிரல்'க்குப் பின் நிலவும் உலகப் போக்குகளிலிருந்து உத்வேகம் பெற்ற 'அமைதி வழி மூலம் சமாதானம்' என்ற முழக்கத்தை அவரது சமாதான நிகழ்ச்சி நிரல் பின்பற்றியது. அந்தக் காலத்தின் உலகளாவிய சமாதான நிகழ்ச்சி நிரலில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால், இந்த நேரத்தில், வளரும் நாடுகளில் உள்ள பலதரப்பு நிதி நிறுவனங்கள் மற்றும் மேற்கத்திய நன்கொடையாளர்களால் சந்தைப் பொருளாதாரத்தை ஆக்ரோஷமாக மேம்படுத்துவதற்கான உலகளாவிய பொருளாதார நிகழ்ச்சி நிரலுடன் அதன் சிக்கலான இணைப்பு உள்ளது. எனவே, குமாரதுங்கவின் சமாதான மூலோபாயம், அமைதியான வழிமுறையின் மூலம் உலக சமாதானத்தை அடிப்படையாகக் கொண்டது.

பல உள்நாட்டு ஆயுத மோதல்கள் மற்றும் உள்நாட்டுப் போர்களைத் தீர்ப்பதற்கான தேவையை ஏற்படுத்திய உலகளாவிய மூலதன வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கான சர்வதேச பலதரப்பு நிதி நிறுவனங்களின் முயற்சிகளிலிருந்து வளரும் நாடுகளால் முழுமையாக விடுவித்துக் கொள்ள முடியவில்லை. வளரும் நாடுகளில் உள்ள உள்நாட்டு ஆயுத மோதல்களானவை, உள்ளூர்-உலகளாவிய சந்தைகளின் விரிவாக்கம், சுதந்திரமான மற்றும் ஒழுங்கான வள ஓட்டங்கள் மற்றும் உள்ளூர் மற்றும் உலகளாவிய செல்வ உற்பத்திக்குச் சாதகமான சூழலை உருவாக்குவதைத் தடுக்கிறது என்ற அடிப்படைக் கோட்பாடுகள் முன்வைக்கின்றன. சாதகமான உலகளாவிய சூழல் மற்றும் உள்ளூர் வர்த்தக வட்டாரங்களிலிருந்து கிடைத்த ஆதரவு மற்றும் ஒப்புதலின் பின்னணியில் தான் குமாரதுங்க விடுதலைப் புலிகளுடனான அரசியல் பேச்சுவார்த்தைகளில் இறங்குவதற்குச் சர்வதேச சமூகத்தின் உதவியை நாடினார். இந்த செயல்முறைக்கு நோர்வே அரசாங்கத்தை அனுசரணையாளராக பணியாற்ற அழைப்பு விடுத்தார்.

எவ்வாறாயினும், அவரது முதல் பதவிக்காலத்தில் (1994-199) 'அமைதியான வழிமுறைகள் மூலம் சமாதானம்' நிகழ்ச்சி நிரலை ஆழமாகப் புரிந்துகொள்வதற்கு, இந்த காலகட்டத்தின் சில தேசிய அளவிலான அரசியல் இயக்கவியலை ஆராய்வது அவசியமானது. பிரேமதாச காலத்தில் கடுமையாகக் குறை மதிப்பிற்கு உட்படுத்தப்பட்ட தங்களின் தனிப்பட்ட மற்றும் குழு சட்டப்பூர்வத் தன்மையையும் அதிகாரத்தையும் மீட்டெடுக்கும் முயற்சிகளில் ஒருவரையொருவர் விஞ்சி நிற்பனவாக உயரடுக்குகள் இருந்தன. ஜே.வி.பியின் 2ஆவது அரச எதிர்ப்பு ஆயுதக் கிளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கு பிரேமதாச அரச இந்திரத்தைப் பயன்படுத்திய விதம், உயரடுக்கினரைக் கிலிகொள்ளச் செய்தது. உயரடுக்கினர், தங்கள் அதிகாரத்தை இழந்தபோதும் பிரேமதாசவைச் சவாலுக்குட்படுத்தும் திராணி அவர்களுக்கு இருக்கவில்லை. எனவே, புதிய ஆட்சியில் தங்கள் அதிகாரத்தை மீளப்பெற உயரடுக்கினர் முண்டியடித்தனர்.

அதேவேளை, அரசியல் உயரடுக்கினர் வன்முறையின் ஏகபோகத்தைப் பாதாள உலகத்தைச் சேர்ந்த புதிய நடிகர்கள் மற்றும் உள்ளூர் அரசியல் காட்சியில் ஆயுதமேந்திய கும்பல்களிடம் இழந்தமையானது, சட்டப்பூர்வ உரிமைக்கான உயரடுக்கின் போராட்டத்தின் மற்றொரு மூலத்தை விளக்குகிறது. இலங்கை அரசியலில் சட்டப்பூர்வமான மற்றும் சட்டத்திற்குப் புறம்பான அதிகாரங்களுக்கு இடையிலான எல்லைகள் மங்கலானது. அரசியலின் நுண்ணிய மற்றும் இடைநிலை மட்டங்களில் அரசியல் உயரடுக்கினரிடையே கடுமையான போட்டியை ஊக்குவித்தது.

இந்த மோதல்கள் இலங்கையில் சமூகம், பொருளாதாரம் மற்றும் அரசியலில் ஏற்படுத்திய தாக்கங்களின் அடிப்படையில், குமாரதுங்கவின் 'அமைதியான வழிகளில் சமாதானம்' என்ற நிகழ்ச்சி நிரல் குறித்து அரசியல் உயரடுக்குகள் உட்பட சமூகத்தில் பல்வேறு பிரிவினர் பலவிதமான விளக்கங்களைக் கொண்டிருந்தர். மிக முக்கியமாக, பொதுஜன முன்னணியின் கூட்டணித் தலைவர் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கட்சித் தலைவர் என்ற முறையில் தனது சட்டப்பூர்வத்தன்மையைத் தக்கவைத்துக் கொள்வதற்கான மூர்க்கமான போராட்டத்தில் ஈடுபட்டிருந்த குமாரதுங்கவுக்கு 'அமைதியான வழியில் சமாதானம்' பிற தனிப்பட்ட-அரசியல் நலன்களைக் கொண்டு வந்தது. அவரது சொந்தக் கட்சிக்குள் அவரது தலைமையின் மீதான முழுமையான ஆதரவின்மையானது, அமைதியான வழிகளில் சமாதானத்தைக் கடைப்பிடிப்பது, குமாரதுங்கவின் தலைமை மற்றும் அரசியல் வேலைத் திட்டத்திற்கு சட்டப்பூர்வமான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு மேலும் ஒரு கருவியாகவும் ஒருங்கிணைந்ததாகவும் மாறியது. அது மட்டுமல்லாமல், தன்னைச் சுற்றிப் பாதுகாப்புக் கவசமாகச் செயல்படுவதில் முக்கிய பங்காற்றிய சக்திவாய்ந்த உலக சக்திகள், தாராளவாத மேற்கத்தியச் சர்வதேச பார்வையாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுடன் இந்தக் கதையாடல் உறுதியாக எதிரொலித்ததால், 'அமைதி மூலம் சமாதானம்' என்ற முழக்கத்தைத் தழுவுவதை தனக்குக் கிடைத்த வாய்ப்பை குமாரதுங்க பார்த்திருக்கலாம்.

## கடிதங்கள்

### பிரச்சினைக்கு தீர்வு வேண்டும்

புத்தளம் மாவட்டத்திலுள்ள எழுவன்குளம், அருவக்காடு எனும் பிரதேசத்தில் 'ஒல்சின்' நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டிருக்கும் சுண்ணக்கல் அகழ்வு செய்யும் இடத்தில் பாரிய குழிகள் உள்ளன.

அக்குழிகளை நிரப்புவதற்கு கொழும்பிலுள்ள குப்பைகளைக் கொண்டு வந்து நிரப்பவேண்டுமென்ற செயற்றிட்டம் நிறுவப்பட்டது. இத்திட்டத்திற்குத் தொடர்ச்சியாக எதிர்ப்பு தெரிவித்து வரும் புத்தளம் சமூகம், அரசாங்கத்திற்கு எதிராக வழக்குத் தொடுத்து வாதாடி வருகின்றனர். ஏனென்றால், இது சுற்றுச்சூழலுக்கு மிகவும் ஆபத்தான ஒரு திட்டமாகும். கடலுக்கு மிக அருகிலே இருக்கின்ற ஒரு இடம், கண்டல் தாவர காடுகள் சூழ்ந்து இருக்கின்ற மிக முக்கியமான இடம், அதேநேரம் வில்பத்து சரணாலயத்திற்கு உட்பட்ட ஒரு பிரதேசமாகவும் உள்ளது.

இவ்வாறு சுற்றாடலுக்குத் தேவையான இயற்கையான பன்முகத்தன்மை நிறைந்த இடமாக அருவக்காடு பிரதேசம் காணப்படுவதனால், இவ்விடத்தில் குப்பைகளைக் கொட்டுவது எதிர்காலத்தில் சந்ததியினருக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். பல்வேறு நோய்களுக்கும் இது அடிப்படையாக இருக்கும்.

அத்துடன், புத்தளத்தில் சீமெந்து தொழிற்சாலையினால் சுவாச புற்றுநோய்கள் ஏற்படுவதுடன், மற்றும் நுரைச்சோலையிலிருந்து வருகின்ற வாயு கடல்நீரில் கலப்பதால் கடல் வாழ் உயிரினங்களை உண்ணும் மக்களுக்கு பெரிதும் ஆபத்தினை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு புத்தளத்தில் சூழலுக்கு ஆபத்தாக இருக்கின்ற இரண்டு செயற்றிட்டத்தினால் மக்கள் சுகாதார பிரச்சினைகளை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். மேலும் இந்த மூன்றாவது திட்டத்தினை கொண்டு வருவதற்கும் புத்தளம் சமூகத்தினர் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர்.


– சொக்கலிங்கம் லோஜினி

'The Seasons Colombo Eight' உடன்

# அதிசொகுசு வாழிட அனுபவம்








Prime Lands Residencies PLC, தனது 'The Seasons Colombo Eight' திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. கொழும்பு 8இன் பெருமைக்குரிய வதிவிடப் பகுதியில், அதி-சொகுசு வாழிட அனுபவத்தை வழங்கும் வகையில் இந்த நவீன கட்டடக் கலை அம்சம் அமைந்துள்ளது.

கொழும்பு-8 பிரதேசத்தின் சந்திரலேகா மாவத்தை மற்றும் ஃபெயார்ஃபீல்ட் கார்டன்ஸ் போன்ற மக்கள் செறிந்து வாழும் பகுதியில் அமைக்கப்பட போகின்றது. வதிவிடத் தொகுதியாக அமைந்துள்ள 'The Seasons Colombo Eight' இனூடாக, பிரத்தியேகமான, உள்ளக மற்றும் விருப்பத்திற்கேற்ப மாற்றியமைத்துக் கொள்ளத்தக்க சொகுசான வாழிட அனுபவங்கள் கொழும்பின் பிரதான பகுதியில் வழங்கப்படுவதுடன், மட்டுப்படுத்தப்பட்ட 44 வசிப்பிடப் பகுதிகளை மட்டும் வழங்குகின்றது.

வதிவிடங்கள் அனைத்தும், 2,000 சதுர அடிப்பரப்பில், மிகச் சிறந்த சௌகரியத்தை வழங்கக்கூடிய வகையில் கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்தப் புதிய நிர்மாணத் திட்டம் தொடர்பில் Prime Lands Residencies PLC பணிப்பாளர் ஷெஹானா ப்ராஹ்மனகே கருத்துத் தெரிவிக்கையில், "44 வசிப்பிடங்களை மட்டும் கொண்ட 'The Seasons Colombo Eight' எனும் அதிசொகுசு வசிப்பிடத் தொகுதியை அறிமுகம் செய்வதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். சொகுசான வாழிட அனுபவத்தை மேம்படுத்தும் வகையில் இந்த புதிய திட்டம் அமைந்துள்ளது. ஒப்பற்ற அனுபவங்களை பெற்றுக் கொடுப்பதற்கான எமது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில் இந்த நிர்மாணத் திட்டம் அமைந்துள்ளது. கொழும்பின் மற்றுமொரு புகழ்பெற்ற முகவரியை பெற்றுக் கொடுப்பதில் நாம் புதிய நியமத்தை ஏற்படுத்தியுள்ளோம்." என்றார்.

வசிப்பவர்களுக்கு சொகுசான வாழிட அனுபவத்தை பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன், ஒவ்வொரு வாழிடப்பகுதியும், பிரத்தியேகத்தன்மையை பெற்றுக் கொடுப்பதாக அமைந்திருக்கும். ஒவ்வொரு அலகுகளும் timber flooring, designer walk in closets மற்றும் fully-fitted pantries ஆகியவற்றுடன் அடுத்த தலைமுறை சாதனங்களையும் கொண்டிருக்கும். சிறந்த உணவு தயாரிப்பு அனுபவத்தை பெற்றுக் கொடுப்பதற்காக Quartz worktops கொண்டிருக்கும்.

நவீன ஸ்மார்ட் வாழிட அனுபவத்தை பெற்றுக் கொடுக்கும் வகையில், 'The Seasons Colombo Eight' இல் மதிநுட்பமான வீட்டு automation கட்டமைப்புகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இதில் குளியலறைகளில் ஸ்மார்ட் கண்ணாடிகள் மற்றும் ஸ்மார்ட் பூட்டுகள் போன்றன அடங்கியுள்ளன. Designer குளியலறை சாதனங்கள் மற்றும் heated towel railings போன்றன வாழ்க்கை முறை அனுபவத்தை மேலும் மேம்படுத்துவதாக அமைந்திருக்கும். தமது ஒவ்வொரு தேவையையும் நிவர்த்தி செய்யக்கூடிய உலகத் தரம் வாய்ந்த வாழிட அனுபவத்தை வசிப்போர் பெற்றுக் கொள்ள முடியும். மேலும், வசிப்பவர்களுக்கு ஒவ்வொரு இல்லத்துக்குமான பிரத்தியேகமான களஞ்சியப்படுத்தல் பகுதிகள் காணப்படுவதுடன், நாள் வேலையாள் அறை, சாரதி அறை, வரவேற்பு பகுதி, பிஸ்னஸ் லோஞ்ச் மற்றும் வைபவ மண்டபம் ஆகியனவும் அடங்கியிருக்கும்.

மொட்டைமாடிப் பகுதியில், இலங்கையில் முதன் முறையாக ave pool உடன், சிறுவர் நீச்சல் தடாகம், சகல வசதிகளையும் கொண்ட உடற்பயிற்சி நிலையம், கேமிங் பகுதியுடன், Bottle Bank பகுதியைக் கொண்ட நிறைவேற்று லோஞ்ச் பகுதி, Coffee Station மற்றும் கரோக்கே லோஞ்ச் ஆகியவற்றுடன், பிஸ்னஸ் லோஞ்ச் பகுதியும், சந்திப்பு அறையும் காணப்படும்.

மொட்டை மாடிக்கு மேலான பகுதியில் நடைபகுதி மற்றும் யோகா திடல் போன்றன காணப்படும், இவற்றினூடாக வசிப்போருக்கு ஓய்வு மற்றும் பொழுதுபோக்குக்காக போதியளவு வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்.

ஒப்பற்ற சொகுசுடன், நவீன வசதிகளையும் கொண்டு நகரின் பிரதான பகுதியில் நிர்மாணிக்கப்படும் 'The Seasons Colombo Eight', நிகரற்ற நகர வாழ்க்கை அனுபவத்தை வழங்கும் என உறுதியளிக்கப்படுகின்றது.

டிஜிட்டல் வங்கி பரிவர்த்தனைகளுக்கு கொமர்ஷல் வங்கியிடமிருந்து


# லோயல்டி புள்ளிகள்

கொமர்ஷல் வங்கி, டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்கு வெகுமதி புள்ளிகளை வழங்குவதற்கான ஒரு புதிய முதல் முயற்சியை ஆரம்பித்துள்ளது. அதனூடாக, டிஜிட்டல் வங்கியியலை, நிதி ரீதியாக பலனளிக்கும் வங்கியியலாக மாறியுள்ளது.

'ComBank Digital' ஊடாக ஏதேனும் பயன்பாட்டு கட்டணத்தை செலுத்தும் செயல்முறைக்கும், தற்போது வங்கியின் 'Max Rewards' திட்டத்தின் மூலம் வெகுமதி புள்ளிகளைப் பெற முடியும் என்று வங்கி அறிவித்துள்ளது. இத்திட்டமானது இதுவரை கடனட்டை அல்லது டெபிட் அட்டை மூலம் செலுத்தப்படும் கொள்வனவுகளுக்கு மட்டுமே அமுலில் இருந்தது.

வங்கியின் ஒற்றை சர்வ-ஊடக டிஜிட்டல் வங்கியியல் தளமான கொம்பாங்க் டிஜிட்டல் (ComBank Digital) ஆனது அனைத்து புதிய பதிவுதாரர்களையும், தற்போதைய பயனர்களையும் உள்ளடக்கிய Max Rewards மூலம் ஒரு பரிவர்த்தனைக்கு 500 புள்ளிகள் வரை வழங்கப்படும், இது கொள்வனவு செய்தல் அல்லது பிற நன்மைகளுக்காகப் பெறக்கூடிய புள்ளிகளைக் குவிக்க பயனர்களுக்கு உதவுகிறது.

கொமர்ஷல் வங்கியின் டிஜிட்டல் வங்கியியலின் உதவிப் பொது முகாமையாளர் பிரதீப் பந்துவன்ச கருத்துத் தெரிவிக்கையில், 'கொம்பாங்க் டிஜிட்டல் பயனர்களுக்கான Max Rewards புள்ளிகள் திட்டம் எங்கள் வாடிக்கையாளர்களின் நலன்களை மையமாக வைத்து வடிவமைக்கப்பட்டுள்ளது.' இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம், ஏற்கனவே கொமர்ஷல் வங்கியின் டிஜிட்டலைப் பயன்படுத்தும் ஒரு மில்லியனுக்கும் அதிகமான கொமர்ஷல் வங்கி வாடிக்கையாளர்களுக்கு டிஜிட்டல் வங்கி அனுபவத்தை மிகவும் பலனளிக்கும் மற்றும் மகிழ்ச்சிகரமானதாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.



கொம் பாங்க் டிஜிட்டல் என்பது கொமர்ஷல் வங்கியின் அனைத்து இணையத்தள மற்றும் மொபைல் வங்கியியல் பிரிவுகளின் ஒருங்கிணைப்பாகும், மேலும் இது டெஸ்க்டாப் கணினிகள், மடிக்கணினிகள், ஸ்மார்ட்போன்கள் போன்ற அனைத்து சாதனங்களிலும் அணுகலைச் செயல்படுத்தும் வகையில் பதிலளிக்கக்கூடிய இணைய பயன்பாடு மற்றும் மூன்று மொபைல் பயன்பாடுகள் (iOS, Android மற்றும் Huawei) மூலம் வழங்கப்படுகிறது.

> **"கொம் பாங்க் டிஜிட்டல் என்பது கொமர்ஷல் வங்கியின் அனைத்து இணையத்தள மற்றும் மொபைல் வங்கியியல் பிரிவுகளின் ஒருங்கிணைப்பாகும்**

## நிகரில்லா நித்தியம் நீர்

அம்மாவைப் பற்றி
ஆயிரம் கவிதைகளை
வடித்துவிடலாம்
ஆனாலும்,
பேனாவைஎடுத்து
முதல்வரிஎழுதும் போதுதான்
அவர்
வார்த்தைக்குள் அகப்படாதவர்
என்பதேபுரிந்துவிடுகிறது...

சொல்லப்படவேண்டியவர்
சொல்லால் சொல்லப்படமுடியாதவர்
சொல் அலங்காரம் கடந்த
நித்தியசோதி
அவர்
பஞ்சத்திலும் வஞ்சம் நோக்காதவர்
நெஞ்சத்தில் சுமந்திடும் நேசர்...

வீட்டுச் சுவற்றில்
நம் கரம் செய்யும் சேட்டைகளைக்
கல்வெட்டுக்கள் என்று களிப்புறுபவர்...

எச்சில் பட்டுவிடும் என
வாய்கட்டிப் பேசும்
மற்றோர் மத்தியில்
எம் எச்சில் சோற்றுக்காய்
பிச்சைஎடுப்பவர்...

பகலிரவுமறக்கக்
கற்றுக் கொண்டவர்
பசியுறநாமும்
பதறி அழுபவர்
பிள்ளைவாழத்
தெய்வம் தொழுது
அளறு உவந்தேற்ற
அழகு அவர்

நோயுறும் சேய்கண்டு
சாமியைத் திட்டிப்
பூமியில் வாழும்
நிகரில்லாநித்தியம் அவர்...

■ தமிழ்க்கீரன்





## வேடம்

நல்ல நேரம் முடியும்
வரைக்கும்
விபசாரிகளுக்கு
கொள்கையும் இல்லை
கோட்பாடும் இல்லை...

தேர்தல் வந்தால்
ஏறிப் போகும்
விபச்சாரிக்கு
உணவுப் பொதியும்
ஊத்த தண்ணீரும்

தேர்தல் வந்தால்
ஆளுக்கொரு ஆடையிட்டால்
ஆளுக்கொரு பேஷரூந்து
நாளுக்கொரு ஊரிலே
நல்லவிருந்து

தேர்தல் வந்தால்
அவர்கள்
ஊரும் பார்க்கலாம்
தொழிலும் பார்க்கலாம்

தேர்தல் வந்தால்
நால்வர் கொண்ட
குடும்பத்தில்
நால்வரும்
உழைப்பாளிகள்


தேர்தல் வந்தால்
மக்களை
ஆண்டு
குத்தகைக்கு
எடுக்கவந்தவனுக்கு
மாப்பிள்ளைவேடம்

தேர்தல் வந்தால்
மாதக்
குத்தகைக்குபோன
விபசாரிக்கு
மாமா வேடம்

பொண்ணுக்கு என்ன
தெரியப் போகிறதென்னும்
நினைப்புத்தானே
அவள்
பூமாதேவி என்பதை
மறந்து விடாதீர்கள்...!

■ இரவிகாந்தன்





## சிந்தனையின் மீள்வாசிப்பு...!

தற்காலிக மாற்றங்கள்
நிரந்தர ஏமாற்றங்கள்.
உடைப்பதும் இவர்கள்தான்
மீண்டும் கட்டியெழுப்ப
அழைப்பவர்களும் இவர்கள்தான்...

திருத்தப்பட்ட கூரைகள்
சில நாட்களுக்கு மட்டுமே.
மீண்டும் மழை ஒழுக்குகளும்
வெய்யோனின் கதிர்வீச்சுக்களும்.

உழைத்தாலே எமது வீடுகளில்
அடுப்பெரியும்.
நிவாரணக் கையேந்தல்களால்
நித்திய எதிர்பார்ப்புகளுக்குள்
எம்மை தம்வசமாக்கி,
வசதிவாய்ப்புகள்
வளமான வாழ்க்கைகளுக்குள்
அவர்கள் சங்கமமாகிவிட....
அவர்களை நம்பிநம்பியே எமது
காலங்கள் கண்ணீருடன் நகர்கின்றன.

இன்னுமின்னும் எத்தனை காலங்கள்
வாக்குறுதி அருவியில்
நீராடிக் களித்து, இவர்களை
அரியணைக்கு அனுப்பி
ஆரவாரமாக கைதட்டியபடி..?

காலாகாலமாக அடகு வைத்துவிட்ட
எமது சிந்தனையை மீள்வாசிப்பிற்கு
உட்படுத்தினால் மட்டுமே
எமக்கு அண்மித்தாகி ஓர்
விடியலின் வெளிச்சம் நிச்சயமாகி.
இல்லையெனில்.....
தற்காலிக மாற்றங்களும்
நிரந்தர ஏமாற்றங்களும்
தொடர்கதையாக..!

■ ஷல்லிதாசன்




இலங்கையில் போலிச் செய்திகளின் பெருக்கத்தில்

# சமூக ஊடகங்களின் தாக்கம்






ஜீவரத்தினம் கஜீபா,
ஊடகக்கற்கைதுறை,
யாழ். பல்கலைக்கழகம்.

சமீபத்திய ஆண்டுகளில், இலங்கை இணைய ஊடுருவலில் குறிப்பிடத்தக்க எழுச்சியையும் மாற்றத்தையும் கண்டுள்ளது. உலகளாவிய ரீதியில் சமூக ஊடகங்கள் பொது உரையாடல் மற்றும் கருத்து பகிர்வுகளை வடிவமைப்பதில் மேலாதிக்க சக்தியாகக் காணப்படுகிறது. இந்த சமூக ஊடக தளங்கள் அதிக தகவல் தொடர்புகள் மற்றும் இணைப்பினை எளிதாக்குகின்ற அதேவேளை, அவை போலிச் செய்திகளைப் பரப்புவதற்கான இடமாகவும் மாறிவிட்டன. இலங்கையில் சமூக ஊடகங்கள் மூலம் தவறான தகவல்களைப் பரப்புவது, இனவாத வன்முறையைத் தூண்டுவது முதல் ஜனநாயக செயல்முறைகளைக் கீழறுப்பது வரை ஆழமான விளைவுகளை சமூக ஊடகங்கள் ஏற்படுத்தியுள்ளது. இலங்கையிலும் உலகளாவிய ரீதியிலும் சமூக ஊடகங்களுக்கும் போலிச் செய்திகளுக்கும் இடையிலான தொடர்பானது தவறான தகவல்கள் பரவுவதற்குப் பங்களிக்கும் காரணிகள் மற்றும் சமூக தாக்கங்கள் ஆகியவற்றை ஏற்படுத்துகிறது.

### இலங்கையில் சமூக ஊடகங்களின் எழுச்சி

குறிப்பாக கடந்த தசாப்தத்தில் இலங்கையில் சமூக ஊடக பயன்பாடு வேகமாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது. ஃபேஸ்புக் (Facebook), டுவிட்டர் (Twitter) மற்றும் வாட்ஸ்அப் (what's app) போன்ற சமூகத்தளங்கள் மில்லியன் கணக்கானோர்களின் அன்றாட வாழ்க்கையின் ஒருங்கிணைந்த பகுதிகளாக மாறியுள்ளன. இந்த தளங்கள் மக்கள் தொடர்பில் இருக்கவும், தகவல்களைப் பகிரவும், தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தவும் உதவுகின்றன. இருப்பினும், இந்த அதிகரித்த இணைப்பு சவால்களையும் கொண்டு வந்துள்ளது. குறிப்பாக தகவல் பரவல் சூழலில் பாரம்பரிய ஊடகங்கள் அடிக்கடி கட்டுப்பாடுகளை எதிர்கொள்ளும் இலங்கையில், சமூக ஊடகங்கள் மக்களுக்கு செய்திகளை அணுகுவதற்கும் பகிர்வதற்கும் மாற்று இடத்தை வழங்கியுள்ளன.

தகவலின் இந்த ஜனநாயக மயமாக்கல் நேர்மறையான அம்சங்களைக் கொண்டிருந்தாலும் கூட, அது சரிபார்க்கப்படாத மற்றும் அதிகமான தவறான தகவல்களின் பரவலுக்கு வழி வகுத்துள்ளது.

பொதுவாகப் பத்திரிகை தரநிலைகள், ஊடக அறநெறிகள் மற்றும் உண்மைச் சரிபார்ப்பு நெறிமுறைகளைக் கடைப்பிடிக்கும் பாரம்பரிய ஊடகங்களைப் போலல்லாமல், சமூக ஊடகங்கள் யாருடையதும் மேற்பார்வையின்றி உள்ளடக்கத்தை வெளியிட அனுமதிக்கிறது.

இது போலியான செய்திகள் வேகமாகப் பரவுவதற்கு வழிவகுத்துள்ளது. இது சில மணிநேரங்களில் எளிதில் வைரலாகி பெரும் தாக்கங்களையும் உருவாக்கி விடுகின்றன. உலகளவிலும் இலங்கையிலும் சமூக ஊடகங்களில் போலியான செய்திகள் பரவுவதற்குப் பல காரணிகள் பங்களிக்கின்றன.

மக்களிடையே டிஜிட்டல் கல்வியறிவு இல்லாதது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இலங்கையில் உள்ள பல சமூக ஊடகப் பாவனையாளர்களால் நம்பத்தகுந்த செய்தி ஆதாரங்கள் மற்றும் அல்லது போலியான தகவல்களை வேறுபடுத்திப் பார்க்க முடியவில்லை அல்லது தெரிவதில்லை எனலாம்.

இது பரபரப்பான உள்ளடக்கத்தின் உருவாக்குவதன் பரவலால் அதிகரிக்கிறது. துல்லியமான செய்திகளைக் காட்டிலும் அடிக்கடி ஈர்க்கக்கூடியதான கவர்ச்சிகரமான பகிரப்படக்கூடிய தகவல்களில் தங்கி இருக்கும். மற்றொரு காரணியாக சமூக ஊடக தளங்களில் பயன்படுத்தப்படும் அல்காரிதம்களின் பங்கு

இந்த அல்காரிதங்கள் அதிக அளவிலான ஈடுபாட்டையும் கவர்ச்சியையும் உருவாக்கும் உள்ளடக்கத்திற்கு முன்னுரிமை அளிக்கின்றன. இதில் துல்லியம் குறைவாக இருந்தாலும், பெரும்பாலும் பரபரப்பான அல்லது உணர்ச்சிகரமான செய்திகளை உருவாக்குவதில் உள்ளடங்கியுள்ளது.

இது ஒரு பாரிய விளைவை உருவாக்குகிறது. அங்கு பயனர்கள் தங்களுடைய நம்பிக்கைகளையும் சார்புகளையும் உறுதிப்படுத்தும் தகவல்களுக்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. மேலும், போலி செய்திகளின் பரவலை மேலும் உறுதிப்படுத்துகிறது. இலங்கையில் நிலவும் அரசியல் மற்றும் இனவாத பதட்டங்களும் போலிச் செய்திகளின் உருக்கத்தில் பெரும்பங்கு வகிக்கின்றன.

பொதுக்கருத்தைத் தூண்டுவது, வன்முறையைத் தூண்டுவது, எதிரிகளை இழிவுபடுத்துவது என பல்வேறு குழுக்களால் தவறான தகவல்கள் பெரும்பாலும் தங்கள் நிகழ்ச்சி நிரல்களை முன்னெடுப்பதற்காக ஆயுதமாக்கப்படுகின்றன.

அரசியல் அமைதியின்மை அல்லது இனவாத பதட்டத்தின் போது, போலிச் செய்திகளின் பரவல் அதிகரித்து, வன்முறை மற்றும் சமூக அமைதியின்மை போன்ற விளைவுகளுக்கு வழிவகுக்கின்றன.

உதாரணமாக இலங்கையில் போலிச் செய்திகளின் தாக்கத்தின் மிகத் தெளிவான எடுத்துக்காட்டுகளில் ஒன்று 2018இல் சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கு இடையில் வெடித்த வன்முறையாகும்.

சிங்கள வாடிக்கையாளர்கள் உண்ணும் உணவில் முஸ்லிம் கடை உரிமையாளர்கள் கருத்தடை மாத்திரைகளைச் சேர்ப்பதாக சமூக ஊடக தளங்களில் பொய்யான தகவல்கள் பரப்பப்பட்டன.

இதன் விளைவாக ஏற்பட்ட வன்முறை பலரைக் கொன்றது, சொத்துக்கள் அழிக்கப்பட்டது மற்றும் சமூகங்களில் ஆழமான வடுவை ஏற்படுத்தியது.

மற்றொரு உதாரணமாக கொவிட்19 தொற்று நோய்களின் போது தவறான தகவல்கள் பலவும் பரவியது.

குணப்படுத்துதல்கள், சிகிச்சைகள் மற்றும் வைரஸின் தோற்றம் பற்றிய தவறான கூற்றுகள் சமூக ஊடகங்களில் பரவலாக இருந்தமை இது பொதுமக்களிடையே குழப்பத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியது.

இத்தகைய தவறான தகவல்களின் விரைவான பரவலானது, கதைகளைக் கட்டுப்படுத்துவதில் மற்றும் நெருக்கடிகளின் போது, பொது பாதுகாப்பை உறுதி செய்வதில் அதிகாரிகள் எதிர்கொள்ளும் சவால்களை எடுத்துக்காட்டுகிறது. இலங்கையில் சமூக ஊடகங்கள் ஊடாகப் பரப்பப்படும் போலிச் செய்திகளின் சமூகத் தாக்கங்கள் மிகப் அதிகமானவையாகும்

முதலாவதாக, இது ஊடகங்கள் மற்றும் பிற நிறுவனங்கள் மீதான நம்பிக்கையை குறை மதிப்பிற்கு உட்படுத்துகிறது.

போலிச் செய்திகளின் பரவலைப் பற்றி மக்கள் அதிகம் அறிந்திருப்பதால், அனைத்து செய்திகளினதும் ஆதாரங்களின் நம்பகத்தன்மையையும் அவர்கள் சந்தேகிக்கத் தொடங்கலாம், இதனால் பொதுமக்கள் நம்பகமான தகவல்களை அணுகுவது கடினமாகவுள்ளது.

நம்பிக்கை அற்ற இந்த தன்மை ஜனநாயக செயல்முறைகளை பலவீனப்படுத்துகின்றது.ஏனெனில் குடிமக்கள் தாங்கள் பெறும் தகவலின் துல்லியம் குறித்து உறுதியாக தெரியாது விடுவதாலும் மேலும், போலிச் செய்திகள் பரவுவது சமூகப் பிளவுகளையும் அதிகப்படுத்துகிறது.

இலங்கை போன்ற ஒரு நாட்டில், இன மற்றும் மத பதட்டங்கள் நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கின்றன, தவறான தகவல்கள் இந்தப் பதட்டங்களைத் தூண்டி வன்முறைக்கு வழிவகுக்கும்.

தவறான கதைகளை விரிவுபடுத்தும் சமூக ஊடகங்களின் திறன், இத்தகைய பதட்டங்கள் பேரழிவுகரமான விளைவுகளுடன் விரைவாக அதிகரிக்கக்கூடும் என்பதாகும். மக்கள் தகவலறிந்த முடிவுகளை எடுப்பதற்கான வாய்ப்புகள் குறைவாகவேயுள்ளன. போலிச் செய்திகள் பரவுவது பொதுச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பிற்குக் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது.

கொவிட்-19 தொற்றுநோய்களின் போது, காணப்படுவது போல், தவறான தகவல் தடுப்பூசிகளை நிராகரிப்பது அல்லது பொதுச் சுகாதார வழிகாட்டுதல்களைப் புறக்கணிப்பது போன்ற தீங்கு விளைவிக்கும் நடத்தைகளுக்கு வழிவகுக்கும்.

இது தனிநபர்களை ஆபத்தில் ஆழ்த்துவது மட்டுமல்லாமல், நோய் பரவுவதைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளைத் தடுப்பதன் மூலம் பரந்த சமூகத்தையும் அச்சுறுத்துகிறது.

டிஜிட்டல் கல்வியறிவை ஊக்குவிப்பதில் பள்ளிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் சமூக நிறுவனங்கள் முக்கிய பங்காற்ற முடியும். சமூக ஊடக தளங்களுக்கும் பொய்யான செய்திகள் பரவுவதைத் தடுக்கும் பொறுப்பு உள்ளது.

துல்லியமான தகவல்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்கு அவர்களின் அல்காரிதங்களைச் செம்மைப்படுத்துவது மற்றும் தவறான உள்ளடக்கத்தைக் கொடியிடுவதற்கும் அகற்றுவதற்கும் வலுவான நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதும் இதில் அடங்கும்.

அரசாங்கம், சிவில் சமூகம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கிடையேயான ஒத்துழைப்பு, துல்லியமான உண்மையான செய்திகள் செழித்து வளரக்கூடிய சூழலை உருவாக்குவது அவசியமாகும். இருப்பினும், போலிச் செய்திகளை எதிர்த்துப் போராடுவதும் சவால்களை முன்வைக்கிறது.

சமூக ஊடகங்களில் உள்ளடக்கத்தை ஒழுங்குபடுத்தும் முயற்சிகள் சில நேரங்களில் தணிக்கை அல்லது பேச்சு சுதந்திரத்தை அடக்குவதற்கு வழிவகுக்கும்.

தீங்கு விளைவிக்கும் தவறான தகவல்களைப் பரப்புவதைத் தடுப்பதற்கும் கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும் இடையே சமநிலையை ஏற்படுத்துவது என்பது கவனமாகப் பரிசீலிக்க வேண்டிய சிக்கலான பணியாகும்.

இலங்கையில் சமூக ஊடகங்களின் எழுச்சியானது தகவல்களைப் பகிரும் மற்றும் நுகரும் விதத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது.

இந்த தளங்கள் தகவலுக்கான அணுகலை ஜனநாயகப்படுத்தியிருந்தாலும், அவை சமூகத்திற்குக் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் போலிச் செய்திகளை விரைவாகப் பரப்பவும் உதவுகின்றன.

இந்த சிக்கலைத் தீர்க்க தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் ஒருங்கிணைந்த முயற்சி தேவைப்படுகிறது.

டிஜிட்டல் கல்வியறிவை மேம்படுத்துவதன் மூலமும், சமூக ஊடகங்களின் பொறுப்பான பயன்பாட்டை ஊக்குவிப்பதன் மூலமும், உள்ளடக்க மட்டுப்படுத்தல் நடைமுறைகளைச் செம்மைப்படுத்துவதன் மூலமும், இலங்கையானது போலிச் செய்திகளின் தாக்கத்தைத் தணித்து மேலும் தகவலறிந்த மற்றும் ஒருங்கிணைந்த சமூகத்தை வளர்க்க முடியும்.

# ஈழ சினிமாவில் ஒரு வளர்ச்சி போக்கு

## ஈழத்து சினிமாவில் பெண் இயக்குநர் லிப்ஸிஜா



ராஜலிங்கம் மனோஜ்,
ஊடகத் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.



ஈழத்து சினிமாவின் வளர்ச்சி கண்டு ஓர் இயக்குநராக மகிழ்ச்சி அடைகிறேன். இந்திய சினிமாவின் தாக்கம் இல்லாமல் எங்கள் கதைகளை அதிகம் வெளிக்கொண்டு வருவதனை நான் இன்னும் எதிர்பார்க்கிறேன். அதிகமான இளைஞர் யுவதிகள் சினிமாவை நோக்கி நகர்வது ஈழ சினிமாவில் ஒரு வளர்ச்சி போக்காக அண்மைய காலங்களில் காணமுடிகின்றது என ஈழத்து சினிமாவில் பெண் இயக்குநர் லிப்ஸிஜா தெரிவித்துள்ளார்.

அவருடன் அண்மையில் நடத்திய நேர்காணலை, கேள்வி பதிலாக இங்கு தருகின்றோரம்.

**கேள்வி: உங்களை பற்றிய ஓர் அறிமுகம்?**

நான் எம்.என்.லிப்ஸிஜா கிளிநொச்சி மாவட்டத்தில் தருமபுரம் கிராமத்தில் பிறந்தவள். 2014 காலப்பகுதியிலிருந்து விவாத நாடக ஆற்றுகைப் பயணத்தை ஆரம்பிக்கத் தொடங்கினேன். இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் கிட்டத்தட்ட 1,000 மேற்பட்ட விவாத நாடக ஆற்றுகையில் நடிகையாக வலம்வந்த வண்ணம் உள்ளேன். இதனடிப்படையில் 2019இல் கல்விச்சுற்றுலாவாக இந்தியாவுக்குச் செல்வதற்கான வாய்ப்புக் கிடைத்தது. அதனைத்தொடர்ந்து சினிமாவில் இயக்குநராக பயணித்தேன்.

**கேள்வி: சினிமாவில் உங்கள் தொடக்கப்புள்ளி எங்கு ஆரம்பமானது?**

விவாத நாடக ஆற்றுக்கையாளராகப் பயணித்துக்கொண்டிருக்கும் காலப்பகுதியில் சினிமாவுக்குள் நுழைவதற்கான வாய்ப்புக்கள் கிடைத்தது. சினிமாவில் எனக்கான ஒரு அடையாளத்தைப் பதிப்பதற்காக இயக்குநராகப் பயணிக்கத் தொடங்கினேன்.

2020இல் காலப்பகுதியில் கிறிசலீஸ் நிறுவனத்தினால் இளம் இயக்குநர்களை உருவாக்கும் திட்டத்தில் நாடளாவிய ரீதியில் 300 விண்ணப்பதாரர்களுக்குள் நானும் ஒருவராக இணைந்து கொண்டேன். தொடச்சியன நேர்முகத்தேர்வுகளின் பின்னர் 5 தமிழ் இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. அதில் நான் கதை கூறியதன் பிரகாரம், என்னையும் இணைத்துக்கொண்டார்கள். அதனடிப்படையில் ஒரு வருட திரைத்துறை சார்ந்த கற்றல்கள் நடைபெற்றன. கற்றல் நிறைவு பெறுவதற்கு முன்னரே குறுந்திரைப்பட போட்டி ஒன்றிற்காக சுயமாகவே 'பாதிவழி' எனும் குறும்படத்தை உருவாக்கினேன். அதுவே எனது இயக்குநர் பயணத்தில் உருவான முதலாவது குறுந்திரைப்படம். பின்னர் ஒருவருட கற்றல் நிறைவின் அந்நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் 'வதுவை' என்ற குறும்படத்தை எழுதி இயக்கினேன்.

**கேள்வி: ஒரு பெண்ணாக இத் துறையில் நீங்கள் எதிர்கொண்ட சவால்களினை கூறமுடியுமா?**

மக்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பதற்கான அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதில் ஏற்படும் சிரமம். தயாரிப்பாளர்களின் பற்றாக்குறை, வெளிப்படையாகக் காணப்படும் பக்கச்சார்புகள், இவ்வாறான சவால்கள் தொடர்ச்சியாக இருந்து கொண்டே இருக்கும்.



**கேள்வி: வளர்ந்து வரும் சினிமா ஆர்வம் கொண்ட பெண்களுக்கு நீங்கள் கூற விரும்புவது?**

தற்காலத்தில் பால் பாகுபாடு இல்லாமல் அனைவரும் எல்லா துறைகளிலும் பயணிக்கும் நிலை உருவாகி இருக்கின்றது. ஆகவே, எமது இலக்கு எதுவோ அதனை அடைய விடாமுயற்சியுடன் பயணிப்போமானால் நிச்சயமாக வெற்றி அடைவோம். சினிமா தொடர்பான ஏராளமான கற்கை நெறிகள் மற்றும் வாய்ப்புகளைச் சரியான முறையில் பயன்படுத்தி சினிமாவில் சாதிக்க வேண்டும் என என்னைப் போன்ற பெண்களுக்கு நான் கூற விரும்புகிறேன்.

**கேள்வி: ஏனைய திரைப்பட இயக்குனர்களிடம் இருந்து உங்களை வேறுபடுத்தும் விடயங்கள் எவை என நினைக்கின்றீர்கள்?**

எனது படைப்புக்கள் பொழுதுபோக்கு அம்சத்தோடு மட்டும் நின்றுவிடாது மக்கள் மத்தியில் சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்தி சமூக விருத்தியைக் கட்டியெழுப்ப வேண்டும்.

**கேள்வி : உங்களது படைப்புகள் அவற்றிற்கான அங்கீகாரம் மற்றும் விருதுகள் தொடர்பில் கூறமுடியுமா?**

நிச்சயமாக இலங்கை மட்டுமின்றி, சர்வதேச ரீதியிலும் எனது படைப்புகளுக்கான அங்கீகாரம் கிடைத்திருக்கின்றது.

01.பாதிவழி- இலங்கையில் நடைபெற்ற Zero Chance திரைப்பட விழாவில் இறுதிச்சுற்றுக்குத் தேர்வாகியது

02.வதுவை- சிங்கப்பூர் சர்வதேச திரைப்பட விழாவில், சிறந்த சமூக விழிப்புணர்வு குறுந்திரைப்பட விருது கிடைக்கப்பெற்றது.

03.இந்தியா - கோல்டன் லீப் சர்வதேச திரைப்பட விழாவில், சிறந்த நடிகைக்கான விருது கிடைக்கப்பெற்றது.

04. கொழும்பு சர்வதேச திரைப்பட விழாவில், சிறந்த இயக்குநருக்கான விருது கிடைக்கப்பெற்றது.

05.பிலிப்பைன்ஸ் சர்வதேச திரைப்பட விழாவில் - சிறந்த பெண்களுக்கான குறுந்திரைப்பட விருது கிடைக்கப்பெற்றது.

06.இந்தியா - அயன் சர்வதேச திரைப்படவிழாவில், சிறந்த அறிமுக இயக்குநருக்கான விருது கிடைக்கப்பெற்றது.

07.யாழ்ப்பாணம் குவியம் திரைப்படவிழாவில், சிறந்த சமூக விழிப்புணர்வு குறுந்திரைப்படம் என்ற விருது கிடைக்கப்பெற்றது.


08.பிரான்ஸ்- தவம் சர்வதேச திரைப்பட விழாவில், நான்கு விருதுகள் கிடைக்கப்பெற்றது.

* சிறந்த குறும்படம்
* சிறந்த இயக்குநர்
* சிறந்த நடிகர்
* சிறந்த நடிகை

09. கனடா விழித்தெழு பெண்ணே இவ்விருது விழாவில் சமூக ஊடக அபிவிருத்திக்கான விருது கிடைக்கப்பெற்றது.

10. அறிவியல் மாற்றம் சமூக மேம்பாட்டு நிறுவனத்தினால் துறைசார் இளைய மூத்த ஆளுமைகளுக்கான விருது விழாவில், சிறந்த சமூக செயற்பாட்டாளர் விருது கிடைக்கப்பெற்றது.

11.சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சிறந்த சமூக செயற்பாட்டாளர் விருது கிளிநொச்சி மாவட்டத்தில் கிடைக்கப்பெற்றது.



**கேள்வி: மறக்க முடியாத அனுபவம்?**

நான் சுயாதீன கலைஞராக இருப்பதால் ஒருநாள் ஆவணப்படப்பிடிப்பிற்காக குறிக்கப்பட்ட பிரதேசத்திற்குச் சென்று படப்பிடிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது, பொலிஸாரால் கைது செய்யப்பட்டு எனக்காக என்னுடைய ஒளிப்பதிவாளரைச் சிறையில் அடைத்தார்கள். இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் இன்றும் அந்த வழக்கு தொடர்ந்த வண்ணமேயுள்ளது. இதனால் அதிகளவான பணத்தொகை செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டது. அத்தோடு, தொழில் இழந்தேன். நிறைய வாய்ப்புகள் இழந்து கடனாளியாகி பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்தவண்ணம் உள்ளேன். இது என்னால் மறக்கமுடியாத விடயம். ஆனாலும் தொடர்ச்சியாக சினிமாவில் போராடிக்கொண்டிருக்கின்றேன்.

**கேள்வி: இத் துறையில் எதனை உச்ச இலக்காக வைத்து பயணிக்கின்றீர்கள்?**

திரைப்படங்களை உருவாக்குவதோடு, நின்றுவிடாது அத்திரைப்படங்களை மக்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பதோடு, வர்த்தகரீதியில் வளர்ச்சி காணவேண்டும். அதன் மூலம் மேலும் நமது சினிமாவை ஊக்கப்படுத்த வேண்டும்.

**கேள்வி: உங்கள் பார்வையில் ஈழத்து சினிமாவின் அண்மைய போக்கு எவ்வாறு இருக்கின்றது?**

அதிகமான முழு நீளத் திரைப்படங்கள் அடுத்தடுத்து வெளிவந்த வண்ணமே உள்ளன. ஒரு இயக்குநராக ஈழத்து சினிமாவின் வளர்ச்சி கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். இந்திய சினிமாவின் தாக்கம் இல்லாமல் எங்கள் கதைகளை அதிகம் வெளிக்கொண்டு வருவதனை நான் இன்னும் எதிர்பார்க்கிறேன். அதிகமான இளைஞர் யுவதிகள் சினிமாவை நோக்கி நகர்வது ஈழ சினிமாவில் ஒரு வளர்ச்சி போக்காக அண்மைய காலங்களில் காணமுடிகின்றது.

**கேள்வி: வளர்ந்து வரும் சினிமா ஆர்வலர்களுக்கு ஒரு பெண் இயக்குனராக நீங்கள் கூற விரும்பும் அறிவுரை என்ன?**

கலையின் உயரம் வாழ்வின் சிகரம் இன்றைய தீர்மானம் நாளைய எதிர்காலம் விரைந்து வாரீர் மாற்றத்தைக்காண்பீர் மகிழ்வுடன் செல்வீர்.

சித்திரத்தேர் வடித்த அஜந்தனுக்கு

# ‘சிற்பக் கலையரசன்’ விருது

## தேர் அன்பளித்த பிரபாகர குருக்களுக்கு ‘விநாயக பக்தி கிரியாசாகரர்’ விருது

■ விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா

காரைதீவு பாலையடி வால விக்னேஸ்வரர் ஆலயத்திற்கான சித்திரத்தேரை வடித்த சிற்பாசாரி அஜந்தனுக்கு ‘சிற்பக் கலையரசன்’ விருதும் குறித்த தேரை அன்பளித்த மகோற்சவ குரு சிவஸ்ரீ சிவ பிரபாகர குருக்களுக்கு ‘விநாயக பக்தி கிரியாசாகரர்’ விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

காரைதீவு வரலாற்றில் முதல் தடவையாக வரலாற்றுப் பிரசித்தி பெற்ற காரைதீவு பாலையடி வால விக்னேஸ்வரர் ஆலயத்தின் முதலாவது சித்திரத் தேரின் கன்னித் தேரோட்டம் கடந்த 7ஆம் திகதியான சனிக்கிழமை பகல் 12 மணியளவில் விநாயகர் சதுர்த்தியன்று ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றமை தெரிந்ததே.

இதுவே காரைதீவு வரலாற்றில் முதலாவது சித்திரத்தேர் என்பது குறிப்பிடத்தக்கது.

வரலாற்றில் முதல் தடவையாக சுமார் 39 இலட்ச ரூபாவில் 21 அடி உயர பாரிய சித்திரத்தேர் ஒன்று ஆலயத்திற்கு அன்பளிப்பு செய்த அமரர் சண்முகரெத்தினம் குருக்கள் குடும்பத்தை நன்றி கூறும் கௌரவிக்கும் நிகழ்வு ஆலயத் தலைவர் இ.தவராசா தலைமையில் ஆலய சந்தானத்து பிரதிநிதி விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா நெறிப்படுத்தலில் சிறப்பாக நடைபெற்றது.

இதன்போது, இத்தேரை குடும்பம் சார்பாக கையளித்த மஹோற்சவ குருவான சுவிட்ஸர்லாந்து தூண் ஸ்ரீ வரசக்தி விநாயகர் ஆலய பிரதம குரு கிரியாதிலகம் சிவஸ்ரீ சிவபிரபாகர குருக்கள் ஆலய பரிபாலன சபையினரால் கௌரவிக்கப்பட்டார்.

‘விநாயக பக்தி கிரியாசாகரர்’ என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

வாழ்த்துப்பாவை வி.ரி.சகாதேவராஜா வாசித்து பரிபாலன சபையினர் கையளித்தனர்.

இந்த ஆலயத்தின் முன்னாள் பிரதம குரு யாழ்ப்பாணம்-கோப்பாய் இருபாலை கற்பகப்பிள்ளையார் ஆலய ஆதீனகர்த்தா அமரர் சிவஸ்ரீ இரத்தினசபாபதி சண்முகரெத்தினம் குருக்கள் வடிவாம்பிகை குடும்பம் சார்பாக இந்த அற்புதமான ஆன்மீக அன்பளிப்பு செய்யப்பட்டிருக்கின்றது.

அமரர் சிவஸ்ரீ சண்முகரெத்தினம் குருக்கள் இவ்வாலயத்தில் பல வருடகாலம் பிரதம குருக்களாக இருந்து நிறைந்த சேவையாற்றியவர். அவரது சிரேஷ்ட புதல்வர் வடக்கு கிழக்கில் மிகவும் பிரபலமான சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் தற்போது இந்த ஆலயத்தின் பிரதம குருவாக இருக்கிறார்.

அவர் தற்சமயம் கனடாவில் பிள்ளையார் ஆலய மகோற்சவத்தில் பிரதம குருவாகச் செயற்படுகிறார். அக்டோபர் 1இல் நாடு திரும்புவார்.

அதேசமயம் இந்த சித்திரத்தேரை வடிவமைத்த யாழ்ப்பாணம் கைதடி தச்சன்தோப்பைச் சேர்ந்த சிற்பாசாரி சுப்பிரமணியம் அஜந்தனுக்கு ‘சிற்பக்கலையரசன்’ என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. குருக்கள்தர்மகர்த்தா க.சுபரெத்தினம் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். குடும்பத்தினர் மற்றும் ஆலய பரிபாலன சபையினர் பொன்னாடை போர்த்தித் தங்கப் பதக்கம் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.








# ‘பனை நடுவோம்; பயன்பெறுவோம்’

■ ஆர்.ஜெயஸ்ரீராம்

மட்டக்களப்பு செங்கலடி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சித்தாண்டி பகுதியானது வருடாந்தம் இயற்கையின் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்டுவருகிற நிலையில் சட்டவிரோதமாக அகழப்படும் மண்வளத்தையும் இயற்கை அழிவையும் தடுக்கும் முகமாக ‘பனை நடுவோம் பயன்பெறுவோம்’ எனும் தொனிப்பொருளில் பனை விதைகள் நடும் நிகழ்வு நடைபெற்றது.

15,000 பனைவிதை நடும் நிகழ்வை சித்தாண்டி சிகண்டி அறக்கட்டளை மற்றும் சித்தாண்டி பகுதிகளிலுள்ள ஆலயங்கள், விளையாட்டுக்கழகங்கள் பொது அமைப்புக்களின் பங்களிப்புடன்

சித்தாண்டி சந்தனமடு ஆற்றங்கரை பகுதிகளில் பனைவிதைகள் நடுபணிகள் வியாழக்கிழமை (12) இடம்பெற்றது.

இன்றைய பனைவிதை நடும் நிகழ்வுக்கு சித்தாண்டி பகுதிகளிலுள்ள பல ஆலயங்களின் அறங்காவல் தலைவர்கள், விளையாட்டுக் கழகத்தின் தலைவர்கள், மயிலத்தமடு மாதவணை பண்ணையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது, சித்தாண்டி சிகண்டி அறக்கட்டளையின் தலைவர் மு.முரளிதன் கருத்து தெரிவிக்கையில்

ஆற்றுப்பகுதிகளில் சட்டவிரோதமாக அகழப்படும் மணல் அகழ்வினால் சித்தாண்டியில் வருடா வருடம் வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது அத்துடன் மண்ணரிப்பு உள்ளிட்ட பல பாதிப்புக்கள் ஏற்படுகின்றது இவற்றைத்தடுக்கும் முகமாகப் பலவருட காலமாக 10 இலட்சத்துக்கு மேல் பனை விதைகளை நட்டுள்ளோம்.

அத்துடன், அப்பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுகின்றவர்களுக்கு நீதிமன்றம் ஊடாக பனைவிதைகளை நட்டு வளர்க்கும் பொறுப்பையும் வழங்கியுள்ளதுடன் அவ்வாறான செயற்பாடுகளும் நடைபெறுகின்றது.











# 170ஆவது ஆண்டு நிறைவு

இலங்கையின் பெருந்தோட்டத் துறையின் குறிப்பிடத்தக்க மைல்கல்லை குறிக்கும் வகையில், இலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் (Planters’ Association -PA) தனது 170ஆவது ஆண்டு வருடாந்த பொதுக்கூட்டத்தை (AGM) கொழும்பு கலதாரி ஹோட்டலில் 2024ஆம் ஆண்டு செப்டெம்பர் 14ஆம் திகதி சனிக்கிழமையன்று மாலை 7 மணிக்கு நடத்தவுள்ளது.

இந்த நிகழ்வில், Hayleys PLC இன் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி மொஹான் பண்டித்தகே, பிரதம விருந்தினராக கலந்து கொள்வதுடன் தொழில்துறையின் முக்கிய பங்குதாரர்களும் பங்குகொள்ளவுள்ளனர்.

வருடாந்த பொதுக்கூட்டத்தில் (AGMஇல்), 2024/2025ஆம் ஆண்டுக்கான தலைவர் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள், அவர்கள் சம்மேளனத்தையும் பெருந்தோட்டத் துறையையும் அடுத்த கட்ட பயணத்திற்கு வழிநடத்துவார்கள், மாறிவரும் சவால்களுக்கு மத்தியில் தொழில்துறையின் முன்னேற்றத்தை மேம்படுத்தவும் ஒத்துழைப்பு வழங்கவும் முக்கிய பங்கு வகிப்பார்கள்.

வருடாந்த பொதுக்கூட்டத்தில் (AGMஇல்) இலங்கையின் பெருந்தோட்டத் துறைக்கு அசைக்க முடியாத சேவையை வழங்கிய சங்கத்தின் புகழ்மிக்க வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாகும். 1854ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் (PA), நாட்டின் மிகப் பழமையான மற்றும் மதிப்புமிக்க நிறுவனங்களில் ஒன்றாக இருந்து, பெருந்தோட்ட சமூகத்தின் நலன்களைத் தொடர்ந்து பிரதிநிதித்துவப்படுத்திப் பாதுகாத்து வருகிறது. இந்த ஆண்டு நடைபெறும் வருடாந்த பொதுக்கூட்டத்தில் (AGM), சம்மேளனத்தின் வரலாற்றைப் பிரதிபலிக்கும் அதேவேளையில், அடுத்த ஆண்டில் துறையின் எதிர்கால போக்கை வகுக்க எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் மிகப்பெரிய அந்நிய செலாவணியை ஈட்டும் துறையாக, பெருந்தோட்டத் துறை, முக்கியமாக உலகளவில் புகழ்பெற்ற Pure Ceylon Teaக்காக அறியப்படுகிறது, மேலும் இது இரப்பர், தெங்கு, வாசனைப் பொருட்கள் மற்றும் ஃபாம் எண்ணெய் போன்ற பிற முக்கிய பயிர்களையும் உள்ளடக்கியது. இந்த துறை இலங்கையின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது, ஏற்றுமதி மூலமாக மட்டுமல்ல, பிராந்திய தோட்ட நிறுவன (RPC) தோட்டங்களில் சுமார் 125,000 பேருக்கு வேலைவாய்ப்பை வழங்குவதன் மூலமும், தோட்ட சமூகங்களில் வசிக்கும் சுமார் ஒரு மில்லியன் மக்களுக்கு ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றது.

1992 இல் தனியார் மயமாக்கப்பட்டதிலிருந்து, இலங்கையின் பெருந்தோட்டத் துறை பெரும் மாற்றங்களைச் சந்தித்துள்ளது. RPCகள் பயிர் பல்வகைப்படுத்தல், சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் தொழிலாளர் நலன் ஆகியவற்றில் முன்னணி பங்கு வகிக்கின்றன. தனியார்மயமாக்கப்பட்ட நிர்வகிப்பு, தொழில்துறையின் செயல்பாட்டுத் திறனைக் கணிசமாக அதிகரித்துள்ளது. அரசின் நிதிச் சுமையைக் குறைத்துள்ளதுடன், தேசிய பொருளாதார வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை வழங்கியுள்ளது.

சங்கம் எதிர்காலத்தை நோக்கிப் பார்க்கும்போது, உற்பத்தித்திறன் மேம்பாடுகள் மற்றும் புத்தாக்கமான பல்வகைப்படுத்தல் செயற்பாடுகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. அதேவேளையில், இலங்கையின் பெருந்தோட்டத் தயாரிப்புகளை உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட நெறிமுறை நடைமுறைகள் மற்றும் நிலையான வளர்ச்சிக்கான தொழில்துறையின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

வொஷிங்டன்

கமலா ஹாரிஸ் – டொனால்ட் ட்ரம்ப்

# விவாதத்தில் வெற்றி யாருக்கு?



கமலா ஹாரிஸ் மற்றும் டொனால்ட் ட்ரம்ப் இடையே நடந்த ஜனாதிபதித் தேர்தல் விவாதத்தில் கமலா ஹாரிஸ் தான் வெற்றியாளர் என அந்நாட்டு ஊடகங்களில் கணிப்புகள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் எதிர்வரும் நவம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், வேட்பாளர்களான முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் இருவரும் முதன்முறையாக விவாதத்தில் பங்கேற்றனர்.

இந்நிலையில், இருவரில் யார் வெற்றியாளர் என அமெரிக்க ஊடகங்கள் கருத்து தெரிவித்துள்ளன.

அதன்படி, ஜனாதிபதி விவாதத்தின் வெற்றியாளர் கமலா ஹாரிஸ், டொனால்ட் ட்ரம்பிற்கு எதிரான அவரின் செயல்பாடு நன்றாக இருந்தது. அவர் ட்ரம்பை மீண்டும் மீண்டும் தூண்டிவிட்டு சமநிலையை இழக்கச் செய்தார் எனவும் கமலா ஹாரிஸ் டொனால்ட் ட்ரம்பை விவாதத்தில் சரமாரியாக தாக்கி விட்டார் எனவும் ட்ரம்ப் பெரும்பாலும் சட்டவிரோத குடியேற்றம் மற்றும் பைடன் ஆட்சியில் நடந்த சதி மட்டும் பேசிவிட்டு விலகிவிட்டார்.

ஆனால், கமலா ஹாரிஸ் தெளிவாக விவாதத்தில் செயல்பட்டார் என்றும், ட்ரம்ப் கோபமுடன் விவாதத்தில் இருந்தார் என்பன போன்ற கருத்துகளை அந்நாட்டு ஊடகங்கள் வெளியிட்டு வருகின்றன.

சிட்னி

ஆஸி. அமைச்சரவையில்

## முதல் இந்திய நபர்

அவுஸ்திரேலிய அமைச்சரவையில் கேரளாவில் பிறந்த ஒருவருக்கு வாய்ப்பு கிட்டியதையடுத்து, அந்நாட்டில் அமைச்சராகும் முதல் இந்தியர் என்ற பெருமையை அவர் பெறுகிறார்.

கோட்டயம் மாவட்டம் பலா மூன்நிலவு என்ற பகுதியில் பிறந்தவர் ஜின்சன் ஆண்டோ சார்ல்ஸ். 35 வயதான இவர், கடந்த 2011இல் அவுஸ்திரேலியாவுக்கு புலம் பெயர்ந்து சென்று அங்கு 'டொப்மென்டல்' மருத்துவ மையத்தின் இயக்குநராகவும், சார்லஸ் டார்வின் பல்கலைக்கழக பேராசிரியராகவும் பணியாற்றினார்.



இந்நிலையில், ஆஸி. வடக்கு மாகாணத்தின் சாண்டர்சன் என்ற பகுதியில் நடந்த தேர்தலில் ஜின்சன் எம்பியாக தெரிவு செய்யப்பட்டார். இவருக்கு அந்நாட்டு அமைச்சரவையில் விளையாட்டு, இளைஞர்கள் நலம், கலாசார துறை அமைச்சர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

லக்னோ

அதிநவீன தொழிநுட்ப முறையில்

## மருத்துவர்கள் புதிய சாதனை



அதிநவீன தொழில்நுட்ப முறையை பயன்படுத்தி, நோயாளியை மயக்கமடைய செய்யாமல், மூளைக்கட்டியை அகற்றி மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர். அறுவை சிகிச்சை நடந்த நேரத்தில் நோயாளி கைபேசியை பயன்படுத்தியபடி இருந்துள்ளார்.


உத்தர பிரதேசின் லக்னோவில் உள்ள கல்யாண் சிங் புற்றுநோய் மருத்துவமனையிலேயே இந்த புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளது.

லக்னோவை சேர்ந்த 56 வயதான ஹரிஸ்சந்திரா பிரஜாபதி என்பவர், கடுமையான தலைவலி, இடது கை மற்றும் கால்கள் பலவீனமான நிலையில் தனியார் மருத்துவமனையில் பரிசோதனை செய்துள்ளார். அவரை பரிசோதித்த மருத்துவர்கள், மூளையில் கட்டி இருப்பதை கண்டுபிடித்தனர்.

இதனையடுத்து, அவருக்கு 'அவேக் கிரனியோடோமி' தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சிகிச்சையளிக்க முடிவு செய்தனர். இதன்படி, ஹரிஸ்சந்திரா பிரஜாபதிக்கு தலையில் மட்டும் 'அனஸ்தீசியா' மருந்தை செலுத்தி உணர்விளக்க செய்தனர்.

தொடர்ந்து அவரை கைபேசியில் விளையாடவும், பேனாவை கையில் வைத்திருக்கவும் செய்த மருத்துவர்கள், காலை அசைக்க செய்தனர். இதன் மூலம் நரம்பை கண்காணிக்கும் கருவியை பயன்படுத்தி கட்டி இருக்கும் இடத்தை துல்லியமாக கண்டுபிடித்து அதனை அகற்றினர்.

இதன் மூலம் நரம்பு பாதிப்பு ஏற்படும் பிரச்சினையை தவிர்க்க முடிந்ததாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



நியூயோர்க்

'இரட்டை கோபுரத் தாக்குதல்'

## விண்வெளி புகைப்படத்தை வெளியிட்ட நாசா

அமெரிக்காவில் நிகழ்ந்த இரட்டை கோபுரத் தாக்குதல் தொடர்பாக விண்வெளியில் இருந்து எடுக்கப்பட்ட புகைப்படத்தை நாசா வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் நியூயார்க் நகரத்தில் கடந்த 2001ஆம் ஆண்டு செப்டெம்பர் 11ஆம் திகதி பயணிகள் விமானத்தை கடத்திய பயங்கரவாதிகள், இரட்டை கோபுரத்தின் மீது மோதி தாக்குதல் நடத்தினர். இந்த சம்பவம் நடந்த 18 நிமிடங்கள் இடைவெளியில் இரட்டை கோபுரத்தின் தெற்கு கட்டடத்தின் மீது மற்றொரு விமானத்தை மோதச் செய்தனர்.

இதனைத் தொடர்ந்து, இராணுவ தலைமையகமான பென்டகன் மற்றும் பென்சில்வேனியா உள்ளிட்ட 3 பகுதிகளில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில், சுமார் 3,000 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

அமெரிக்காவை எச்சரிக்கும் விதமாக நடத்தப்பட்ட இந்த தாக்குதல், வரலாற்றில் நடந்த மிக மோசமான தாக்குதலாகும். இந்த தாக்குதல் தேசப்பாற்றாளர்கள் தினமாக ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், 23ஆம் ஆண்டு நினைவு தினம் புதன்கிழமை (11) அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த தாக்குதல் சம்பவத்தின் போது, அமெரிக்காவின் விண்வெளி வீரர் பிராங்க் குல்பர்ட்சன், சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்துள்ளார். அப்போது, தனது வேதனையை கடிதத்தின் மூலம் எழுதி அனுப்பியுள்ளார். 2001ஆம் ஆண்டு செப்டெம்பர் 12 எனும் திகதியிட்ட கடிதத்தில், அமெரிக்க இரட்டை கோபுர தாக்குதல் சம்பவம் குறித்து தனது துக்கத்தை பகிர்ந்துள்ளார்.

அந்த சமயத்தில் விண்வெளியில் இருந்து எடுக்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய, இந்தக் கடிதத்தை நாசா தற்போது வெளியிட்டுள்ளது.

குஜராத்

மர்ம காய்ச்சலால்

## 15 பேர் உயிரிழப்பு



குஜராத் மாநிலத்தில் பரவும் மர்ம காய்ச்சலால் கடந்த 8 நாட்களில் 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

குஜராத் மாநிலத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்பு கனமழை பெய்தது. இதனால், அப்பகுதியிலிருந்த மக்களின் அன்றாட வாழ்வு கடுமையாக பாதிக்கப்பட்டு அவதியடைந்தனர். இதைதொடர்ந்து, தற்போது பலர் மர்ம காய்ச்சலால் பாதிக்கப்பட்டு வருவதாக அம்மாநில சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. குஜராத்- கட்ச் (Kutch) மாவட்டத்தில் 48 பேருக்கு மர்ம காய்ச்சல் இருப்பது கண்டறியப்பட்டதுள்ளது.

# இங்கிலாந்தை வென்றது அவுஸ்திரேலியா



இங்கிலாந்துக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரில், சௌதாம்டனில் புதன்கிழமை (11) நடைபெற்ற அவ்வணியுடனான முதலாவது போட்டியில் அவுஸ்திரேலியா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

அவுஸ்திரேலியா: 179/10 (19.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: ட்ரெவிஸ் ஹெட் 59 (23), மத்தியூ ஷோர்ட் 41 (26), ஜொஷ் இங்லிஸ் 37 (27) ஓட்டங்கள். பந்துவீச்சு: லியம் லிவிங்ஸ்டோன் 3/22 [3], சஹிப் அஹ்மட் 2/21 [3], ஜொஃப்ரா ஆர்ச்சர் 2/31 [3.3], அடில் ரஷீட் 1/23 [4])

இங்கிலாந்து: 151/10 (19.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: லியம் லிவிங்ஸ்டோன் 37 (27), பில் ஸோல்ட் 20 (12) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷோன் அபொட் 3/28 [3.2], அடம் ஸாம்பா 2/20 [4], ஜொஷ் ஹேசில்வுட் 2/32 [4], ஸ்கேவியர் பார்ட்லெட் 1/26 [3.4], மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் 1/30 [3], கமரொன் கிறீன் 1/14 [1.2])

போட்டியின் நாயகன்: ட்ரெவிஸ் ஹெட்

இரண்டு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டியானது கார்டிஃப்பில் இன்றிரவு 11 மணிக்கு நடைபெறவுள்ளது.



## மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி: ஆதிப்க்கு முதலிடம்

■ எம்.எஸ்.எம்.ஸாகிர்

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டியானது, மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் செவ்வாய்க்கிழமை (11) நடைபெற்ற நிலையில், 16 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஜே.எம்.ஆதிப் முதலிடம் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளார்.

## இந்தியாவுக்கெதிரான தொடரில் ஜாகர் அலி



இந்தியாவுக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான பங்களாதேஷ் குழாமில், டெஸ்ட் போட்டிகளில் இதுவரை அறிமுகத்தை மேற்கொள்ளாத ஜாகர் அலி இடம்பெற்றுள்ளார்.

காயம் காரணமாக ஷொரிஃபுல் இஸ்லாம் குழாமில் இடம்பெறவில்லை.

குழாம்: நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ (அணித்தலைவர்), ஷட்மன் இஸ்லம், ஸகிர் ஹஸன், மெஹிடி ஹஸன் மிராஸ், முஷ்பிக்கூர் ரஹீம், ஷகிப் அல் ஹஸன், லிட்டன் தாஸ், மொமினுல் ஹக், ஜாகர் அலி, தஸ்கின் அஹ்மட், ஹஸன் மஹ்மூட், நஹிட் ரானா, தஜியுல் இஸ்லாம், மஹ்முடுல் ஹஸன் ஜோய், நயீம் ஹஸன், காலிட் அஹ்மட்.

## நண்பர்களின் சமரில், தெல்லிப்பளை அணி வென்றது

■ அஸ்ஹர் இப்றாஹீம்




யாழ்ப்பாணம் தெல்லிப்பளை மகாஜனா கல்லூரி பழைய மாணவர் அணிக்கும், யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயா கல்லூரி பழைய மாணவர் அணிக்குமிடையிலான நண்பர்களின் சமர் என வர்ணிக்கப்படும் இருபதுக்கு-20 கிரிக்கெட் போட்டியில், தெல்லிப்பளை மகாஜனா பழைய மாணவர் அணி வென்றது.

இப்போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனா பழைய மாணவர் அணி 20 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 270 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயா பழைய மாணவர் அணி 18.5 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 139 ஓட்டங்களையே பெற்று 130 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

## ஏழாமிடத்துக்கு முன்னேறிய அடம் ஸாம்பா



சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் ஏழாமிடத்துக்கு அவுஸ்திரேலியாவின் அடம் ஸாம்பா முன்னேறியுள்ளார்.

ஸ்கொட்லாந்துக்கெதிரான மூன்று போட்டிகளில் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றியமையைத் தொடர்ந்தே எட்டாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஏழாமிடத்தை ஸாம்பா அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.அடில் ரஷீட்,
2.அகீல் ஹொஸைன், 3.ரஷீட் கான்,
4.குடகேஷ் மோட்டி,
5.வனிது ஹசரங்க,
6.அன்றிச் நொர்கியா,
7.அடம் ஸாம்பா,
8.பஸல்ஹக் பரூக்கி,
9.ஜொஷ் ஹேசில்வூட்,
10.மகேஷ் தீக்ஷன.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.ட்ரெவிஸ் ஹெட்,
2.சூரியகுமார் யாதவ்,
3.பில் ஸோல்ட்,
4.யஷஸ்வி ஜைஸ்வால்,
5.பாபர் அஸாம்,
6.மொஹமட் றிஸ்வான்,
7.ஜொஸ் பட்லர்,
8.நிக்கலஸ் பூரான்,
9.ருத்துராஜ் கைகவாட்,
10.ஏய்டன் மார்க்ரம்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.மார்க்கஸ் ஸ்டொய்னிஸ்,
2.சிகண்டர் ராசா,
3.ஷகிப் அல் ஹஸன்,
4.வனிது ஹசரங்க,
5.மொஹமட் நபி.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 13, செப்டெம்பர் 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.